சரசுவதி மகால் வெளியீட்டு எண். 366

# சுந்தரி அம்மானை

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

## சரசுவதி மகால் நூலகம்

**தஞ்சாவூர்.**

1995] [விலை ரூ. **12-00**

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு எண்—366

# சுந்தரி அம்மானை

பதிப்பாசிரியர்

திருமதி. ச. திலகம், பி.லிட்.,
தமிழ்ப்பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

1995 விலை ரூ. 12-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | சுந்தரி அம்மானை |
| பதிப்பாசிரியர் | : | புலவர் ச. திலகம், பி. லிட்., |
| வெளியிடுபவர் | : | இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம். |
| வெளியீட்டு எண் | : | 366 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | நவம்பர், 1995. |
| தாள் | : | 14. 2 கிலோ-சேஷசாயி |
| நூல் அளவு | : | 21 X 14 செ.மீ. |
| பக்கங்கள் | : | 90 |
| படிகள் | : | 1000 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | இலக்கியம் |
| விலை | : | ரூ. 12—00 |

# வெளியீட்டாளர் முகவுரை

பலமொழி இலக்கிய, இலக்கண, சோதிட, மருத்துவ நூல்களை ஓலைச்சுவடிகளிலிருந்தும் காகிதச் சுவடிகளிலிருந்தும் பாங்குறப் பதிப்பித்து வெளியிட்டு வரும் சரசுவதி மகால் நூலகம், இப்பொழுது 'சுந்தரி அம்மானை' என்னும் இந்நூலைப் பதிப்பித்து வெளியிடுகின்றது.

சரசுவதி மகால் நூலகத் தமிழ்த்துறையில் இடம்பெற்றுள்ள 1825ஆம் எண்ணிட்ட ஓலைச்சுவடியை அடிப்படையாகக்கொண்டு இந்நூல் பதிப்பித்து வெளியிடப்படுகின்றது.

மகாபாரதக் கிளைக்கதைகளுள் ஒன்றான 'சுந்தரி—அபிமன்யு'வின் திருமணத்தை மையமிட்ட இக்கதை அம்மானைக் கதைப்பாடலாக வெளிப்பட்டுள்ளது.

இந்நூலை நன்முறையில் பதிப்பித்துள்ள இந்நூலகத் தமிழ்ப்பண்டிதர் திருமதி ச. திலகம் அவர்களுக்கு என் பாராட்டுகள்.

இந்நூலுக்கு அடிப்படையாக அமைந்த ஓலைச்சுவடியினைச் சரசுவதி மகால் நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ள தாளியாப்பட்டி திரு வை. பாலார் கவுண்டர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூலினை வெளியிடத் தேவையான நிதியுதவியை நல்கியுள்ள நடுவண் அரசுக்கு எனது நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்நூல் நன்முறையில் வெளிவர ஆவன செய்த நூலக நிருவாக அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொறுப்பு) திரு. இரா. கோபால் அவர்களுக்கும் நூலகப் பதிப்பு மேலாளர் மற்றும் நூலகர் திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும் எனது பாராட்டுகள். இந்நூல் நன்முறையில் வெளிவரத் துணைநின்ற ஏனையோருக்கும் எனது பாராட்டுகள்.

தமிழ் இலக்கிய அன்பர்கள் இந்நூலைப் பெரிதும் வரவேற்பர் என நம்புகின்றேன்.

**தேவ். ஜோதி ஜெகராஜன், இ. ஆ. ப.**
மாவட்ட ஆட்சியர் மற்றும் நூலக இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
21—11—1995

# முன்னுரை

'சுந்தரி அம்மானை' என்னும் இந்நூல் 'சுந்தரி—அபிமன்யு'வின் திருமணத்தை மையமிட்ட கதையினைக் கூறுவதாகும். இந்நூல் பிற்கால அம்மானைக் கதைப் பாடல் வடிவ அமைப்பில் இயற்றப்பெற்றுள்ள நூலாகும்.

## மூலச்சுவடி

இப்பதிப்புக்கு அடிப்படையாக அமைந்த சுவடி சரசுவதி மகால் நூலகத் தமிழ்த்துறையில் இடம்பெற்றுள்ள **1825**-ஆம் எண்ணுள்ள ஓலைச்சுவடியாகும்.

**1826**-ஆம் எண் கொண்ட மற்றொரு சுந்தரி அம்மானைச் சுவடி ஒப்பு நோக்கப் பயன்படுத்தப்பட்டது.

இச்சுவடிகளைச் சரசுவதி மகால் நூலகத்திற்கு அன்புள்ளங்கொண்டு வழங்கியுதவியவர் திரு வை. பாலார் கவுண்டர் (தாளியாப்பட்டி. வெள்ளியணை அஞ்சல், கரூர் வட்டம்) அவர்களாவார்.

## நூலமைப்பு

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தெட்டு (**1978**) அடிகளால் ஆன நூலாகும் இச்சுந்தரி அம்மானை.

விநாயகரை நூற்காப்பாகப் போற்றிப் பராவும் பாடலுடன் இந்நூல் தொடங்குகின்றது. பல அம்மானை நூல்களின் தொடக்க அடிகளை ஒத்து இந்நூலின் தொடக்க அடிகளும்,

" முந்திமுந்தி விநாயகனே முருகுழலாள் சரஸ்வதியே
கந்தனுக்கு முன்பிறந்த கணபதியே முன்நடவாய்! "

என அமைந்துள்ளன.

மகாபாரதக் கதைப்பகுதியை விரித்து அம்மானையாகத் தான் பாடுவதை இந்நூலை இயற்றிய புலவர்,

" அய்வருட பாரதத்தை அடவாக நான்பாட
வந்த வினையும் வல்வினையும் போயிடுமாம்! "

என நூலின் தொடக்கப் பகுதியில் எடுத்துரைத்துள்ளார்.

(அடி எண். 6)

" மாயன்மகள் சுந்தரியை மாலையிட: நான் பாட

(அடி எண். 6)

எனும் அடி இந்நூலின் கதைப்பொருளை எடுத்துரைப்பதாக உள்ளது.

அம்மானை இலக்கியங்களில் பொதுவாக, அம்மானை எனும் சீரைக்கொண்டு முடியும் அடிகள் பல இடம்பெற்றிருக்கும். 'இச்சுந்தரி அம்மானை' நூலில் மூன்று இடங்களில் மட்டுமே 'அம்மானை' எனும் சீரைக்கொண்டு முடியும் அடிகள் காணப்படுகின்றன.

அவை,

'மழையம்பு தான்போய் வகையாகச் சுத்திவந்து
அக்கினி அம்பை அவிச்சுதுகாண் அம்மானை!

(அடி எண். 1296, 1297)

'விட்டுவிடும் என்று விடைகொடுத்தார் அம்மானை!'

(அடி எண். 1594)

'வெட்டித் துரத்தி வெத்திகொண்டார் அம்மானை'

(அடி எண். 1729)

நூலின் காப்புச் செய்யுளில் சுந்தரி அம்மானை' எனச் சுட்டப்படும் இந்நூல் நூற்பயன் கூறும் நூலினிறுதிப் 'பகுதியில்' சுந்தரி மாலை எனக் குறிக்கப்படல் சுட்டத் தக்கது.

நூலின் இறுதியில் நூற்பயன் உரைக்கும் பகுதி இடம்பெற்றுள்ளது. அப்பகுதி வருமாறு:

'சுந்தரி மாலை சுகமாய்ப் படித்தோர்கள் இன்னஞ் சொல்லுமென்று இன்பமுடன் கேட்டோரும் காசு தொடுத்துக் காதாரக் கேட்டோரும் படியும் படியுமென்று பாக்கிலைகள் தந்தோரும் என்றும் பதினாறாய் இளையபதம் உண்டா வார். ஆல்போல் தழைத்து அறுகதுபோல் வேரூண மூங்கில்போல் சுத்தம் முசியாமல் வாழ்ந்திருப்பார், அடி எண். 1969—1975)

இந்நூலின் காலம், நூலை இயற்றிய புலவர் குறித்த விவரங்களை அறிதற்கான சான்றுகள் நூலிலோ சுவடியிலோ காணப்பெறவில்லை. சுவடியில் ஆங்காங்கு நூலின் சில அடிகள் விடுபட்டிருக்கக்கூடும் எனும் ஐயம் கதைக்கோவை தடைபடுவதால் எழுகின்றமை சுட்டுதற்கு உரியது.

## கதைச்சுருக்கம்

பாண்டவர்களோடு பகைமை பாராட்டும் துரியோதனாதியர், பாண்டவர்களுக்குத் துணையாகவுள்ள கண்ணனையும், பலராமனையும் தங்கள் பக்கம் கொணர எண்ணினர். அதற்காகச் சகுனியின் திட்டப்படி பலராமனின் மகள் வத்சலையைத் துரியோதனின் மகன் லட்சணனுக்கு மணமுடிக்க முயன்று பலராமனின் இசைவைப் பெற்றனர்.

இத்திருமணத்தை விரும்பாத கண்ணன், சுபத்திரையின் மகன் அபிமன்யுவிற்கும் வத்சலைக்கும் திருமணம் நடத்த, கடோற்கயனைக் கொண்டு ஏற்பாடுகள் செய்தான்.

கடோற்கயன் தன் மாயாபலத்தால் வத்சலையைக் கண்ணன் இருக்குமிடத்திற்குத் தூக்கிக் கொணர, அபிமன்யு—வத்சலை திருமணம் கண்ணனால் செய்து வைக்கப்பட்டது.

லட்சணன்—வத்சலை திருமணம் நடப்பதாக இருந்த இடத்தில் வத்சலையாகக் கடோற்கயன் மாய உருவெடுத்து இருந்து. அத்திருமணம் நடைபெறாமல் செய்து விட்டான்.''

என மகாபாரதக் கிளைக்கதைகளுள் ஒன்றாக இடம் பெற்றுள்ள இக்கதையே இந்நூலின் கதையாக உருப் பெற்றுள்ளது. இந்நூலுள் லட்சணன்—லக்கணகுமாரன் என்றும், வத்சலை — சுந்தரி என்றும், அபிமன்யு — அபிமன்னன் என்றும் குறிப்பிடப்படுகின்றனர்.

## இலக்கிய அழகு மிகுந்த பகுதிகள்

இந்நூலை இலக்கிய அழகு மிகுந்த பகுதிகள் பல அணி செய்கின்றன. எடுத்துக்காட்டுக்கு ஒரு பகுதியைக் காணலாம்.

'' ஈனாத வாழை இளவாழைக் கண்ணதுபோல்
காயாத வாழை கருவாழைக் கண்ணதுபோல்
கய்யிரண்டும் காலுரெண்டும் வாளுருவிவிட்டாப்போல்
பல்லுத் திருவழகு பார்வதிக்கு ஒப்பிடலாம்
நெத்தித் திருவழகு நிலாப்பிறைக்கு ஒப்பிடலாம்

மார்புத் திருவழகு வண்ணம் பதிச்சாப்போல்
மூக்குத் திருவழகு முத்துப் பதிச்சாப்போல்
கையழகும் காலழகும் ராச்சியத்தில் கண்டதில்லை
மூன்னழகும் பின்னழகும் முத்து பதிச்சதுபோல்.'

(அடி எண். 393—401)

## உவமைகளும் பழமொழிகளும்

அழகிய உவமைகள், பழமொழிகள் ஆகியன சூழலுக்குப் பொருத்தமுற ஆங்காங்கு அமைந்து இவ்விலக்கியத்தை எழிலுடையதாக ஆக்குகின்றன.

"பழமே நழுவிப் பாலில் விழுந்தாப்போல்' 197)

"கத்தாழை மேலே கல்லுவண்டி வந்தாலே
கல்லு வண்டிக்குச் சேதமோ? கத்தாழைக்குச் சேதமே?
கல்லுவண்டிக் கொக்கும் எங்களத்தை மகன் மச்சினரும்
கத்தாழை போடொக்கும் காந்தாரி பெத்தபிள்ளை
கொக்குத் திரளில் இராசாளி பாய்ந்தாப்போல்
ராசாளி யோடொக்கும் எங்களத்தை மகன் தானும்'
(307—312)

"செப்பூசி கொண்டு செவியில் இடித்தாப்போல்' (344)

"வெந்நீர் கொதித்து வீடுதான் வேகாது" (690)

முதலான அழகிய உவமைகளும், பழமொழிகளும் இந்நூலை அணிசெய்கின்றன.

## பேச்சு வழக்குச் சொற்கள் மிகுதியாக இடம்பெறல்

இந்நூலில் பேச்சு வழக்குச் சொற்கள் அவ்வவ்வடிவங்களிலேயே மிகுதியாக இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எடுத்துக்காட்டுக்குச் சில

'அந்தப்படிக்கு' 'சம்மதிச்சு' 'அவதாரம்' 'சிலவு' 'குடுத்து' (கொடுத்து) 'போறியளோ' 'யிருசா யெழுந் திருடா' 'அசல்நாட்டான்' (அயல்நாட்டான்) 'பயகளா' 'அதுக்கு' 'போளை' 'புனலாத்தில்' 'துளுத்து' 'விரை' (விதை) 'குடு' (கொடு) 'சோதினை' 'நெத்தி'

## நூலுள் மீண்டும் மீண்டும் இடம்பெறும் அடிகள்

நாட்டுப்புற இலக்கியங்களின் பண்புகளில் ஒன்று குறிப்பிட்ட சில அடிகளில் மீண்டும் மீண்டும் இடம் பெறுதலாகும். இந்நூலிலும் சில குறிப்பிட்ட அடிகள் அவ்வாறு மீண்டும் மீண்டும் இடம்பெற்று இந்நூலினை எழிலுறச் செய்கின்றன.

" ஆரண்ட வனங்கடந்து அயிரா பதங்கடந்து
ஊசி வனங்கடந்து உத்திராச்சப் பூமிவிட்டுச்
சில்லென்ற காடும் செடியும் புரைந்திரமும்
மூங்கி வனங்கடந்து மும்நூத்திக் காதவழி " (65—68)

என்னும் அடிகளும் நூலுள் *530, 534, 535, 634 676, 677, 774, 775, 850, 851, 872 936, 937, 1265, 1266, 1354, 1355 1406, 1409, 1447, 1467, 1796* ஆகிய எண்ணுள்ள அடிகளும் ஒரே தொடர்கள் மீண்டும் மீண்டும் பயில்கின்றனவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும்

" நீலவிழிக் கண்கள் ரெண்டும் நெருப்புத்தணலானதுவே
தின்னுமந்தத் தம்பலங்கள் தீக்கலந்து வேகுதிப்போ "

என்னும் அடிகளும் (அடி எண். *160, 161*) *1072, 1073 1097, 1185* முதலான அடிகளும் ஒரே தொடர்கள் மீண்டும் மீண்டும் பயின்கின்றனவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுந்தரி — அபிமன்யுவின் திருமணக் கதைகூறும் இலக்கியச் சுவடிகள்

சுந்தரி — அபிமன்யுவின் திருமணக் கதைகூறும் இலக்கியச் சுவடிகள் சரசுவதி மகால் நூலகத்திலும் (சுவடி எண்கள் 1815, 1826) தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடித் துறையிலும் (தொடர் எண்கள்: *1325, 1338, 1470*

1530) திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக் கழகத்திலும் (4275. 8413, 8422, 8431. 8641, 9075) இடம் பெற்றுள்ளன.

இவற்றுள் கேரளப் பல்கலைக் கழகத்தில் இடம் பெற்றுள்ள சுந்தரி கல்யாணம் அம்மானை (எண்: 8413) என்னும் சுவடி நூலின் ஆசிரியர் சுப்பிரமணியத் தேவர் எனும் குறிப்பு கிடைக்கின்றது. எதிர்காலத்தில் இச் சுவடிகளைப் பயன்படுத்தி ஆய்வுப் பதிப்பை உருவாக்க வாய்ப்புகள் உள்ளன.

**சுந்தரி — அபிமன்யுவின் திருமணக்கதை கூறுவனவாக முன்னர் வெளிவந்த சில அச்சு நூல்கள்**

சுந்தரி — அபிமன்யுவின் திருமணக் கதையைக் கூறுகின்றனவாக அம்மானை இலக்கியங்கள் சில இபற்றப் பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை 'புகழேந்திப் புலவரால் இயற்றப்பட்டது' எனும் குறிப்பைத் தாங்கி யுள்ளன. இவற்றுள் ஒன்றுக்கொன்று வேறுபாடுடையவன வாகவும் உள்ளன.

சுந்தரி — அபிமன்யுவின் திருமணக்கதைகூறும் அம்மானை நூல்களின் சில பதிப்பு விவரங்கள்:

அபிமன்னன் சுந்தரிமாலை கருணானந்த சுவாமிகள் (ப. ஆ.) பிரபாகர அச்சுக்கூடம், சிந்தாதிரிப்பேட்டை நவம்பர் 1870.

அபிமன்னன் சுந்தரிமாலை, முருகேச பண்டிதர் (ப. ஆ.) ஸுக விரஞ்சரி முத்திராக்ஷர சாலை, ஏப்ரல் 1875.

அபிமன்னன் சுந்தரிமாலை, சுப்பிரமணிய சுவாமிகள் (ப. ஆ.) மாதவனிவாச அச்சுக்கூடம், 1880)

அபிமன்னன் சுந்தரிமாலை, அப்பாவு பிள்ளை (ப. ஆ.) ஸ்ரீமட்டுவார் குழலம்பாள் அச்சுக்கூடம், 1884.

அபிமன்னன் சுந்தரிமாலை, பொன்னுசாமி முதலியார் (ப. ஆ.) வித்தியா வினோத அச்சுக்கூடம், 1887.

அபிமன்னன் சுந்தரிமாலை, ஆர். ஜி. பதி கம்பெனி சென்னை.

சுந்தரிமாலை, மூன்றாம் பதிப்பு, சி. நாராயணசாமி முதலியார் (ப. ஆ.) சிந்தாதிரிப்பேட்டை பிரஸ், சென்னை மார்ச் 1873.

சுந்தரிமாலை, ஏழாம் பதிப்பு, ஏப்ரல் 1874.

(ஆதாரம்: தமிழ்நூல் விவர அட்டவணைத் தொகுதிகள்.

(ப. ஆ. பதிப்பாசிரியர்

**நன்றியுரை**

இந்நூலை நான் பதிப்பிக்க அனுமதி வழங்கிய நூலக முன்னாள் இயக்குநர் உயர்திரு மு. சதாசிவம் அவர்களையும். நூல் இப்போது வெளிவர ஆவன செய்து உதவிய மாவட்ட ஆட்சியர் மற்றும் நூலக இயக்குநர் உயர்திரு தேவ. ஜோதிஜெகராஜன், இ. ஆ. ப., அவர்களையும் நூலக நிருவாக அலுவலா திரு எஸ். சீனிவாஸராகவன் அவர்களையும், பதிப்பு மேலாளர் மற்றும் நூலகர் திரு அ. பஞ்சநாதன் அவர்களையும் நூல் வெளிவரும் இவ்வேளையில் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

**நிறைவுரை**

'சுந்தரி அம்மானை' எனும் இந்நூல் சுவடிப் பதிப்பு நூலாக இங்கு உருப்பெற்றுள்ளது. இப்பதிப்பின் குறைகளைப் பொறுத்தாற்றி நிறைபோற்றுமாறு அறிஞருலகைத் வேண்டி அமைகின்றேன். நன்றி!

**ச. திலகம்,**
**தமிழ்ப் பண்டிதர்,**
சரசுவதி மகால் நூலகம்,
**தஞ்சாவூர்.**

# சுந்தரி அம்மானை

**அம்புவியில் சுந்தரி அம்மானை பாடுகிறேன்**
**இன்பமாய் என்நாவில் இருந்தருளும்**
**பைம்பொன் மணிசேரும பாதத்தை ஊன்றினான்**
**சண்முகனார்க்கு முனபிறந்த தற்பரனே கணபதி**
**காப்புத் தானே.**

முந்திமுந்தி வினாயகனே முருகுழலாள் சரஸ்வதியே
கந்தனுக்கு முன்பிறந்த கணபதியே முன்னடவாய் !
அய்வருட பாரதத்தை அடவாக நான்பாட
வந்த வினையும் வல்வினையும் போயிடுமாம் ;
கேட்டவர்கள் எல்லோரும் கிளைகோத்திரமாய்
வாழ்ந்திருப்பார் ;

மாயன்மகள் சுந்தரியை மாலையிட நான்பாடத்
தாரார் புகழுடைய தர்மருட சீமையெல்லாம்
தர்மா புரமும் தரணிபுரம் உள்ளதெல்லாம்
அருச்சுனா புரமும் ஆனைகுந்தி உள்ளதெல்லாம்
குருச்சேத்திரபூமி கூடவே ஆண்டிருந்தானே

பரிவான சந்திரகுலம் பாண்டுபுத்திரர் ஐவரையும்
திரியோதனன் திஷ்ட்டோதரன் திறமான தம்பியரும்
கன்னனுங் காங்கையனும் கனத்ததொரு சல்லியனும்
விதுரனுட வில்லியனும் வேந்தர் புரோகிதரும்
இப்படி வாழ்ந்து இவர்கள் இருக்கையிலே

திரியோ தனன்பாவி தீங்கு தனைநினைந்து
அய்வரையுந் தான்துரத்தி அரசாள வேணுமென்று
அந்தப்படி சம்மதிச்சு அடவாகத் தான்நினைந்து
சூது பொருதித் தோற்கடிக்க வேணுமென்று
அந்தப் படிக்கி அய்வரையுந் தோற்கடித்து

அய்வர் வனவாசம் அடவாகப் போனபின்பு
திரியோ தனன்பாவி தேசத்தை ஆண்டிருந்தான் ;
அந்தநல்ல வேளையிலே ஆனதொரு லக்கணர்க்கு
மாயனமகள் சுந்தரியை மாலையிட வேணுமென்று
துரோண குருக்களையுந் துருசாகத் தானழைத்து

அந்த மொழிகேட்டு ஆசாரி ஓடி வந்து
ஆசாரி யைப்பார்த்து ஆனதுரி யோதனனும்
லக்கண குமாரனுக்கு நாள்குறிக்க வேணுமைய்யா
மாயன் அரமனைக்கி வகையாக ஆளனுப்பித்
தாரார் புகழுடைய தர்மருட தன்னுருமை

என்னுருமை விட்டாலும் அவனுருமை விடுவதில்லை
கலியாணம் பண்ணக் கடுகவே போகவேணும்
என்றுசொல்லிப்பேசி இருக்கிற வேளையிலே
திரியோ தனனுடனே துரோணாசாரி ஏதுசொல்வார்
என்ன கலியாணம் எண்ணிக்கொண்டாய் இப்போது

தர்மருட தன்னுரிமை தக்காது சொல்லுகிறேன்
மாயன் சதிகாரன் மன்னவனே நம்பாதே
தீங்கில்லா அரமனைக்கித் தீங்கு வருகுதிப்போ
அச்சமில்லா ராச்சியத்தில் அச்சமே வந்துதிப்போ
வாறதொரு காரியத்தை வகையாக நானுரைத்தேன்

அந்த மொழிகேட்டு ஆனதிரி யோதனனும்
துரோணா சாரிநீர்தான் தோற்றாமல் சொன்னீரே
வேறையொரு வர்சொன்னால் வேறையுண்டுங் காரியங்கள்
நீ, அறியாமல் சொன்னதுக்கு அவுதாரம் வாங்கிடுவேன்
அந்த மொழிகேட்டு ஆசாரி தானெழுந்து

தன்னுட அரவனைக்கித் தானேதான் போகலுற்றான்
திரியோ தனனுடைய சேனைமன்னர் அத்தினையும்
கர்ணனுங் காங்கையனும் கனத்ததொரு சல்லியனும்
விஷ்ட்டுமா சாரியனும் மெய்யான மன்னவனும்
மாயன் சகுனி மற்றுமுள்ள மன்னவரும்

கொன்றைமாலைத் தேத்தரசன் கோடிமன்னர்
அத்தினையும்
படைத்தலைவர் மன்னவர்கள் பாங்காகக் கூட்டமிட்டுச்
சங்குதுவா ரகாபுரிக்கித் தான்பயணம் போகவென்று
அதுவே பயணமென்றான் ஆனதொரு மன்னவனும்
கர்ணன் சகுனி காங்கையரும் பயணமென்றான்

பயணச் சிலவுக்குப் பத்துலட்சம் பொன்குடுத்து
மாயனுட தேவிக்கி வர்ணக்கம்பிப் பட்டுமொன்று
மாயன்மகள் சுந்தரிக்கி வர்ணத்துகில் ஆடையொன்று
இத்தினையுந் தான் வாங்கி எல்லோரும் பயணமென்று
ஆனைபடை சேனை அரசர்மக்கள் படையெடுத்துக்

குதிரை படைசேனை கோடிமன்னர் படையெடுத்து
அஸ்த்தினா புரங்கடந்து ஆனைகுந்தி தான்கடந்தார்
தர்மா புரங்கடந்து தர்மருட தேசம்விட்டுக்
குருச்சேத் திரபூமி கூடவே தான்கடந்து
ஆரண்ட வனங்கடந்து அயிரா பதங்கடந்து

ஊசி வனங்கடந்து உத்திராச்சப் பூமிவிட்டுச்
சின்னொன்ற காடும் செடியும் புனாத்திரமும்
மூங்கி வனங்கடந்து முந்நூத்திக் காதவழி
சங்குதுவா ரகாபுரியில் தானேதான் வந்திறங்கி
மாயன் அரமனைக்கி வகையாகத் தூதுவிட்டுத்

தூதுவனும் வந்து துவாரகா புரிபுகுந்து
மாயனைக் கண்டு வகையாகத் தெண்டனிட்டு,
தெண்டனிட்ட தூதுவனே சேதியென்ன சொல்லூமடா
கர்ணன் சகுனி காங்கையனும் வந்திறங்கி
அரமனைக்கி வாறோமென்று அடியேனை
அனுப்பிவைத்தார்

அப்போது மாயவரும் அடவாகச் சேதிசொன்னார்
வந்தவர்கள் அத்தினையும் வரச்சொன்னார் அப்போது
தூதுவரும் வந்து தோற்றமுள்ள கண்ணார்முன்னே
வரச்சொல்லிச் சொன்னாரே மாயன் பெருமாளும்
கர்ணனுங் காங்கையரும் கனத்தபுகழ்ச் சல்லியனும்

மூவருங் கூடி மூர்க்கமுடன் தான்நடந்தார்
மாயன் அரமனைக்கி வகையாக வந்துகண்டார்
வந்த உறமுறையை வாருமென்று தான்கேட்டு
முந்தின தாகத்துக்கு மோருதண்ணீர் தான்கொடுத்து
வந்ததொரு காரியங்கள் வகையறியச் சொல்லுமென்றார்

உத்துருமைப் பெண்கேட்க உகந்துவந்தோம் மாயவனே
லக்கண குமாரனுக்கு நாளிட வந்தமய்யா
கலியாண சோபனங்கள் கடுகவே பண்ணவேணும்
நல்லதென்று சொல்லி நடந்தாராம் மாயவனும்
நீதானுங் கொண்டாலென்ன அவன்தானுங் கொண்டாலென்ன

எப்பவென்று நானிருந்தேன் இனிக்கேளும் என்வார்த்தை
திரியோதனன்உறவு தேடக் கிடையாது
உருமைக்கி யானால் ஒன்பதுலட்சம் பொன்னுமுண்டு
அசலுக்கு ஆனால் அன்பதுலட்சம் பொன்னுமுண்டு
நீங்கள் கொடுத்து நிறவேத்தப் போறியளோ

நம்மிட கோப்பாளப் பொட்டியிலே ஒருபொட்டி தந்தியென்றால்
ஒருபொட்டிப் பணமானால் ஓலகத்துக் கேறாது
நாலுபொட்டிப் பணமானால் நாங்கள் குடுக்குறோம்
வீண்பேச்சுப் பேசாதே வீரியங்கள் சொல்லாதே
ஒருபொட்டிப் பணந்தாரோமென்று உள்ளபடி சம்மதியும்

அந்தப் படிக்கி அடவாகச் சம்மதியும்
கர்ணன் சகுனி காங்கையனுந் தான் நடந்தான்
துவரகா புரிவிட்டுத் துருசாகத் தான் நடந்து
அருச்சுனா புரங்கடந்து ஆனைகுந்தி உள்புகுந்து
குருச்சேத்திர பூமியிலே கூடாரம் வந்திறங்கித்

திரியோ தனப்பெருமாள் தேவேந் திரன்கொலுப்போல்
இருந்த சபையிலே இவர்களும் வந்தார்கள்
காயோ பழமோ கர்ணாநீ சொல்லும் என்றான்
காய்க்கிமிகப் போனவர்கள் கனிந்தபழங் கொண்டுவந்-தோம்
அனுமந்தன் என்றுசொல்லி அன்பது களஞ்சியமாம்

ஆயிரங் களஞ்சியத்தை அடவாகத் தான்திறந்து
ஓட்டையிலே ஆயிரமாம் ஒருகோடிப் பணமெடுத்து
ஆலாத்திப் பாறையிலே அவர்கள் திசைநோக்கிப்
போற தடத்திலே புதுச்சுங்கம் உண்டுபண்ணி
ஆயமுந் தீர்ந்து ஆலாத்திப் பாறையிலே

கொண்டுவந்து தான்குமிச்சார் கொல்லி மலைபோலே
காத்திலே தூத்திக் கடைப்பாளை தானொதுக்கி
முன்னாகப் பாதிதள்ளிப் பின்னாகப் பாதிதள்ளி
நடுராசி யாக நலமாகத் தான் அளந்தார்
அப்பவே, ஆயனுட பொட்டி அரைப்பொட்டி யானதுவே

மறுபடி வந்து வர்ணக் களஞ்சியத்தைத்
திரும்பி எடுத்தார்கள் சேனைமன்னர் உள்ளதெல்லாம்
கொண்டுவந்து போட்டார்கள் கோபாலன் பொட்டியிலே
அப்பவு, மாயனுட பொட்டி முக்கால்பொட்டி யானதுவே
தேடுந் திரவியங்கள் திறமாக இல்லையென்று

திரியோ தனன்தேவி திருக்கழுத்தில் தாலிதனை
வாங்கிவருவோமென்று வகையுடனே போனார்கள்
அப்பலே, ஆயனுட பொட்டி அடவாக ரொம்பியதே
பொட்டி யெடுத்துப் போகையிலே சொன்னாராம்
இன்னம் ஒருசேதி சொல்ல மறந்தேன்காண்

இனிமேல் கலியாணந் தாமிசங்கள் பண்ணாதே
கலியாண வாசலிலே கலக்கம் வந்துதென்று சொல்லாதே
சேராத சத்திராதி சேனைபடை வந்தாலும்
தேவேந் திரமகனார் சித்திரசேனன் வந்தாலும்
தேவர்கள் தானும் திறமாக வந்தாலும்

ஆராரு வந்தாலும் அஞ்சேன்காண் மன்னவனே
தாரார் புகழுடைய தர்மருட கூட்டம்வந்தால்
அதுக்குப் பயப்படுவேன் அடவாகச் சொல்லிவிட்டேன்
அந்தப்படிச் சொன்னதுக்கு ஆனதிரி யோதனனும்
தர்மருட கூட்டஞ் சண்டைக்கி வந்தாலும்

எங்கள் கயிலானால் எங்கள்பெண் சுந்தரியாள்
அவர்கள் கயிலானால் அவன்பெண் சுந்தரியாள்
அதுக்குவே றெண்ணாதே ஆனதொரு மாயவரே
பொட்டி யெடுத்துப் பொக்கிஷத்தைத் தான்திறந்து
ராகுவ னென்றுசொல்லி நானூறு களஞ்சியமாம்

அனுமந்த னென்றுசொல்லி ஆயிரங் களஞ்சியமாம்
ஆயிரங் களஞ்சியத்தை அடவாக ரொப்பிவிட்டார்.
ஆயிரம் விளக்கு அவியாமல் தானெரிய
இந்தப் படியாக இருக்குமந்த வேளையிலே
அய்வர் வனவாசம் அடவாகப் போகையிலே

மாயன்மகள் சுந்தரிக்கி மஞ்சள் குடுத்துவந்தார்.
அப்படி யிருக்கையிலே ஆன மணவாளன், வேறாச்சு
அதுகண்டு ஓடிவந்தார் ஆனதொரு தாதியரும்
மாயன்மகள் சுந்தரியை வகையாகக் கண்டுவந்து
கேளாத வார்த்தை கேட்டுவந்தோம் என்றாயே

பணத்துக்கு ஆசைப்பட்டு மாயன் பதையாமல் சம்மதிச்சு
லக்கண குமாரனுக்கு நாள்குறித்துச் சம்மதிச்சு
மணவாளன் வேறாச்சு மங்கையரே உந்தனுக்கு
அதுகண்டு ஓடிவந்தேன் ஆத்தாளே தாயாரே
நீலவிழிக் கண்கள்ரெண்டும் நெருப்புத்தண லானதுவே

தின்னுமிந்தத் தம்பலங்கள் தீக்கலந்து வேகுதிப்போ
கோவித் தெழுந்திருந்து கொம்பனையா ளேதுசொல்வாள்
தாதியரைத் தானழைத்துத் தயவாக அப்பொழுது
பல்லாக்குத் தானெடுத்துப் பரிவுடனே வாருமென்றாள்
தாதியரு மோடித் தயவாக அந்நேரம்

பல்லாக்கு அலங்கரித்துப் பாங்குடனே கொண்டுவந்தார்
அஞ்சு மடமாது தோகைநல்லாள் சுந்தரியும்
தோகைமயில் சாய்கைநல்லாள் சுந்தரியுந் தானெழுந்து
சிங்கமுகப் பல்லாக்குச் சேரவே ஏறிக்கொண்டு
மாயன்மகள் சுந்தரியாள் மனதில் பொறிபறக்க

மாயன் அரண்மனைக்கி வாறாளே சுந்தரியாள்
அய்யமறக் கண்டாரே ஆயன்மகள் சுந்தரியாள்
மாயன் பெருமாள் மனதி லறிந்துகொண்டு
நீட்டினார் காலை நெடுகவிட்டார் முக்காட்டை
கண்டாளே சுந்தரியாள் கண்கள் பொறிபறக்க

ஆயன் பெருமாளே எங்களையாவே நித்திரையோ
மாயன் பெருமாளே மன்னவனே நித்திரையோ
ஆயன் பெருமாளே எங்களையாவே நித்திரையோ
மலைங்காடு தன்னில் மாடுமேய்த்த புத்தியோதான்
ஆலாங் காடுதன்னில் ஆடுமேச்ச புத்தியோதான்

வெண்ணெய் திருடியுண்ட வெக்கங்கெட்ட புத்தியோ-தான்
கண்டுண்ட புத்தியோதான் கண்ணுறக்க மானதுவோ
விருசா யெழுந்திருடா விடவிடவே ஏசுவண்டா!
அந்தமொழி கேட்டு ஆயன் எழுந்திருந்து
ஆயனைக கண்டு அடிவணங்கித் தெண்டனிட்டுத்

தெண்டனிட்ட சுந்தரியைத் திக்கென்று தானெடுத்துப்
பொன்னான மேனியிலே புழுதிபட ஞாயமென்ன
தங்கப்பொன் மேனி தரையில்விழக் காரியமென
வந்ததொரு காரியத்தை வகையாகச் சொல்லுமம்மா
கேளாத வார்த்தைகேட்டு வந்தேன் எங்களையா

வந்ததே போதுமம்மா மாணிக்கக் கண்மணியே
தேனீண்ட கண்ணே தெகுட்டாத தெள்ளமுதே
மானீண்ட கண்ணே வரிசைபெற்ற மாணிக்கமே
உன்னைக் குடுக்குமிடம் பாத்துக் குடையைப் பதிச்சனம்மா
சேருமிடம் பாத்து சென்னல் பதிச்சனம்மா

வாழுமிடம் பாத்து வாழை பதிச்சனம்மா
பழமே நழுவிப் பாலில் விழுந்தாப்போல்
உங்கநல்ல சோறுமுண்டு உடுத்தத் துகிலுமுண்டு
திங்கநல்ல பாக்குமுண்டு சிலவழிக்க ரொக்கமுண்டு
வனம்போன பாண்டவர்கள் வாறதில்லை விட்டுவிடு

அப்படியே சொல்ல அதிகோபம் உண்டாகி
என்ன மதியாலே எண்ணிக்கொண்டீர் கலியாணம்
ஆடுமேய்ச்ச புத்தியாலே அறிவுகெட்டுப் போனாயோ
மாடுமேய்ச்ச புத்தியாலே மதிகெட்டுப் போனாயோ
குட்டிமேச்ச புத்தியாலே கூறுகெட்டுப் போனாயோ

பணமே படைத்தவர்க்குப் பாங்காகப் பெண் குடுப்பாயோ
பத்தாப் பறையன் பணமோ படைக்கிலையோ
சக்கிலியன் தானுந் தனத்தைப் படைக்கிலையோ
பறையன் பணங்கொடுத்தால் பாங்காகப் பெண் கொடுப்பாய்
பணமே படைத்தால் பாழ்ங்கிணத்தில் போட்டிடுவான்

திரவியம் படைத்தால் தெருக்கடையே போட்டானோ
என்னைக் கொள்ளவந்தவன் இளந்தலை பிளந்தெரிய
திரவியம் வேணுமென்றால் ஒன்தேவியரைத் தள்ளிவிடும்
அத்தை மகனிருக்க அசல்நாட்டான் வாறதென்ன
மாமி மகனிருக்க மறுநாட்டான் வாறதென்ன

ஒருத்தன் பெண்ணுக்கொருத்தன் ஆசைப்பட்ட கதைகேளும்
ஒரு பட்டணத்து ராசா பள்ளிக்கூடம் போட்டுவச்சு
ராச குமாரத்தி ரெண்டுபிள்ளை தனையுமப்போ
சுப்பிரமணிய வாத்தியைத் துருசாகக் கூட்டிவந்து
பள்ளிக்கூடம் போட்டுப் படிக்கிற நாளையிலே

படியாத வித்தையெல்லாம் படிச்சுதுகாண் பிள்ளைரெண்டும்
இனிமேல் பள்ளிக்கூடம் போகவே வேண்டாமம்மா
படிப்புவைத்த வாத்தியார்க்குப் பத்துப்பொன் கொண்டுவந்து

பத்துப்பொன் கொண்டுவந்து பாதத்தில் வைத்தல்லவோ
பேரறோமென்று சொல்லிப் பிள்ளைரெண்டு
போனதுவே

வாத்தியார் தானும் வகையுடனே தான்பாத்துப்
பள்ளிப் பயகளா நீ (ர்) பருமணலு கொண்டாங்கள்
ராச குமாரத்தி மூத்தபிள்ளை தனையழைத்து
மணலுக்குத் தானும் போகவேண்டாம் நீதானும்
பிள்ளைகள் போனபின்பு பேய்கொண்ட
வாத்தியவன்

மூத்த பிள்ளையுடனே வாத்தியு மேதுசொல்வான்
பெண்ணேநீ யெந்தனுக்குப் பொங்கியிட
வேணுமென்றான்
பூந்தோட்டம் தன்னில் பொங்கியிட வேணுமென்றான்
அய்யாவே இப்போது அதுவசனஞ் சொல்லாதே
ஒதிவைத்த வாத்தியார் ஒருக்காலும் என்தகப்பன்

படிப்பிவைத்த வாத்தியார் பத்துத்திரம் என்தகப்பன்
ஆதி குருவே அய்யாநீ தீண்டாதே
கைச்சரசம் பண்ணாதே கர்த்தாவே என்தகப்பா
என்றுசொல்லித் தானும் இருக்குமந்த வேளையிலே
பள்ளிப் பயல்களும் பருமணல் கொண்டுவந்தார்கள்

வந்ததைக் கண்டு வாத்தி யடங்கிவிட்டான்
வந்தனனு ராத்திரியே மூத்தபிள்ளை ருதுவாச்சு
பாங்காகப் புரோகிதரைப் பாங்குடனே கூட்டிவந்து
சொன்னாரே ராசாவும் துருசாக ஆளுவிட்டு
ஓட்டமா யோடி ஒருநொடியில் கூட்டிவந்தார்

வந்ததொரு பிராமணனை ராசாவுந் தான்பார்த்து
அம்மா ருதுவான நாள்பாரு மென்றுசொன்னார்
பஞ்சாங்கப் புரோகிதரும் பாங்குடனே யேதுசொல்வான்

ஓதிவைத்த வாத்தியை ஒருநொடியில் கூட்டிவந்தால்
கண்டறிந்து சொல்லுகுறேன் காரியங்கள்
உள்ளதெல்லாம்

அந்தப் படிக்கி ஆளிருவ ரோடிவந்து
வாத்தியாரைக் கூட்டிவந்து வகையுடனே கேட்டார்கள்
ராசரைவக் கண்டு நலமாகத் தெண்டனிட்டு
வாத்தியார் தனையழைத்து வகையாகப் பாருமென்றார்
ருதுவான வேளைபச்சம் நன்றா யிருக்கவில்லை

ஆண்டவனே ராசாவே அடியேன்செரல்
விண்ணப்பங்கள்
அம்மாள் இருந்தக்கால் நம்மிட அரமனைக்கி ஆகாது
அதுக்குநல்ல விபரமும் அடவாகச் சொல்லுகுறேன்.
பொன்போனை கொண்டுவந்து போனையிலே
பெண்ணைவைத்து
ஓடுகிற புனலாத்தில் உள்ளையே தள்ளுமய்யா

அந்தப் படியே போளையிலே பெண்ணைவைத்து
அத்தை மகனிருக்க மகளே ஆத்தோடே போறாயே
அழுது புலம்பி ஆத்துடனே விட்டார்கள்
வாத்தியார் தானும் வகையுடனே அப்போது
புனலியாத் தாங்கரைக்கி வாத்தியா ரோடிவந்து

ஆத்தை மிகப்பார்த்து வாத்தியார் தானிருந்தான்
அந்தநல்ல வேளையிலே அவளத்தை மகன்
வேட்டைபோய்
வேட்டையும் சிக்காமல் வேங்கை பிடித்துவந்தான்
புனலியாத்தாங் கரையோரம் வந்தே யிருந்தார்கள்
அந்தநல்ல வேளையிலே போளை ஆத்தோட
வந்துதுகாண்

வாறத்தைக் கண்டுராசா வகையாக ஏதுசொல்வான்
போளைபோ உங்களுது போளைக்குள் இருக்குறது என்னுதடா
நல்லதென்று தான்போயி நாலுபேர் பிடித்துவந்தார்
போழையைக் கொண்டுவந்து ராசாமுன்னாக வயித்தார்கள்
போழையைத் தானவிழ்த்துப் பார்த்தார்கள் அப்போது

போழையிலே தானுமொரு பொண்ணும் இருந்ததுவே
ராசாவுக்கேத்த நல்லதொரு பொண்ணச்சு
நம்மளுக்கு ஆனால் நல்லதொரு தாயாச்சு
அப்போது மந்தராசக் குமாரத்தி ஏதுசொல்வாள்
நான் பொல்லாத நாளையிலே ருதுவானவள் என்றுசொல்லி

ஓடுகிற தண்ணியிலே உள்ளாகத் தள்ளிவிட்டார்
அப்போதுராசா போளையைப் பிடித்துவந்த பேர்தனக்கு
போழைநின்ன நிறைக்குப் பொன்னுமே தான்கொடுத்து
வெறும்பே ராகுதென்று ஒருவேங்கை தனையடைத்து
ஓடுகிற தண்ணியில உள்ளையே தள்ளிவிட்டார்

வருகிற போளையை வாத்தியார் தானுங்கண்டு
ஓடிப் பிடித்து எடுத்தானே வாத்தியவன்
எடுத்துவந்த போளைதனை எறக்கியே வீட்டில் வைத்துப்
பள்ளிப் பயல்களைப் பாங்காகத் தானழைத்துச்
சிவன்கலி யாணம்வந்து ராசா முடியவேணும்

தலைவாசல் தன்னைச் சாத்தியே நீங்களுந்தான்
ராமசெயம் ராமசெயம் ராமசெய மென்னுங்கள்
என்றுசொல்லிப் போட்டு வாத்தியார் வீட்டிலே போய்ப்புகுந்து

போளை கிட்டவந்து அடிபெண்கொடி நீர்தானும்
பூங்கா வனத்திலே பொங்கியிடச் சொன்னேனே

அப்போது மாட்டோமென்றாய் அகப்பட்டுக் கொண்டாயே
கலியாண சோபனங் கடுகவே பண்ணவேணும்
கட்டை யவிழ்த்தபின்பு கண்டானே வேங்கைதனை
பெண்ணென்று நானிருந்தேன் பெருவேங்கை யானதுவே
பெண்ணென்று நானிருந்தேன் பெருவேங்கை கொல்லுதடா

கன்னியென்று நானிருந்தேன் கருவேங்கை கொல்லுதடா
இட்டுதடா வேங்கை வாத்தியார் இருதுண்டமாய்விழுந்தான்
போட்டுதடா வேங்கை பொங்கியே கோபங்கொண்டு
வேங்கைதான் அப்போ வெளிப்பட்டுப் போனதுவே
வாத்தியோ டொக்கும் என்னைக்கொள்ளவந்த லெக்கணனும்

மாயன் பெருமாளே மன்னவனே கேளுமின்னம்
கத்தாழை மேலே கல்லுவண்டி வந்தாலே
கல்லு வண்டிக்குச் சேதமோ? கத்தாழைக்குச் சேதமோ?
கல்லுவண்டிக் கொக்கும் எங்களத்தை மகன் மச்சினரும்
கத்தாழை யோடொக்கும் காந்தாரி பெத்தபிள்ளை

கொக்குத் திரளில் இராசாளி பாய்ந்தாப்போல்
ராசாளி யோடொக்கும் எங்களத்தை மகன்தானும்
அவருட பிலமும் அறிந்து மிக்கிருந்து
நாளைக் கல்யாணம் காண்பயடா எங்களையா
என்றுசொல்லிச் சுந்தரியாள் ஏறினாள் பல்லாக்கு

தாயார் அரமனையைத் தங்கைநல்லாள் தேடிவந்தாள்
மகள்வாறா ளென்றுசொல்லி வர்ணக் கதவடைத்தாள்
மாயன்மகள் சுந்தரியாள் வகையாகத் தன்பார்த்துத்
தாயேஉன் மங்கிலியம் குங்குலிய மாகுமம்மா
என்றுசொல்லிச் சுந்தரியாள் தன்னரமனைக்கி
வந்துவிட்டாள்

அரமனைக்கு வந்து ஆயன்மகள் சுந்தரியாள்
தலையை விரித்தழுதாள் தங்கையரும் அப்போது
முத்தான கண்ணீரை முதுமார்பில் சோரவிட்டாள்
பவளம்போல் கண்ணீரைப் பக்கமே சோரவிட்டாள்
தங்கம்போல் கண்ணீரைத் தன்மார்பில்
சோரவிட்டாள்

நான்பெண்ணாய்ப் பிறந்ததே மண்ணாப்
பிறந்தனில்லை
மண்ணாய்ப் பிறந்தாலும் மரமா முளைத்தனில்லை
மரமாப் பிறந்து வகையாக வாழ்ந்தாலும்
நல்ல மரமென்று நல்லோரும் தான்பாத்து
அடிமரமும் அச்சாகும், மேல்மரமும் பொம்மையாகும்

சித்திரைத் தேருக்குச் செல்வத்தே ராகுமையா
வையாசித் தேருக்கு வசந்தத்தே ராகுமையா
ரதத்துமேல் சுவாமி நலமாக வந்தாலும்
நாட்டிலே உள்ள நல்லோர் பெரியோர்கள்
எல்லோரும் மங்கைமுகம் இருப்பார்கள் வையகத்தில்

அந்தப்படி புண்ணியம் அடவாகச் செய்தனில்லை
பெண்ணாய்ப் பிறந்துநான் பேய்க்கோலம் ஆனேனே
பத்தினியாள் புலம்புறது பஞ்சவர்க்குங் கேளாதோ
அருந்துதியாள் புலம்புறது அய்வருக்குங் கேளாதோ
உத்தமியாள் புலம்புறது ஒருவருக்குங் கேளாதோ

அத்தைமகன் மச்சினர்க்கு ஆளுமிகக் காணேனே
இப்படி அழுது இருக்குமந்த வேளையிலே
வைகைக் கரையோரம் வாதுராசா தானிருந்தான்
செப்பூசி கொண்டு செவியில் இடித்தாப்போல்
ஆரடா புலம்புறவன் அப்போதே ஓடிவந்தான்

பாப்பான் வடிவெடுத்துப் பஞ்சாங்கம் கைப்பிடித்துப்
பத்தினியாள் அரமனைக்குப் பக்கமெதி ராகவந்தான்
கண்டாளே தாதிமார்கள் பாப்பான் வருகுறதை
ஏந்தவூ ரய்யா எங்கைவந்தாய் இப்போது
மாயன்மகள் சுந்தரிக்கு வரிசைக்கலி யாணமென்று

கலியாணம் என்றுவந்தேன் கட்டழகி சுந்தரிக்கு
அந்தமிகச் சத்தம் சுந்தரிக்கி அப்போதே கேட்டதுவே
நிண்ணால் குத்தும் விழுந்தால் உதையுமென்றாள்
அப்படி யாக அடிச்சிழுத்துப் போகையிலே
பேத்தியென்று விளையாடி னேனம்மா பின்குடுமி
விட்டுவிடும்

அந்தமிகச் சேதி அடவாகச் சொன்னார்கள்
கொம்பனையாள் சுந்தரியாள் கூட்டிவரச் சொன்னாளே
கூட்டிவந்து விட்டார்கள் கொம்பனைக்கி முன்னாக
நான்தாண்டி வாதுராசா நல்லதொரு பெண்மயிலே
நீ, அழுகுற சத்தம் அரமனைக்குக் கேட்டதினால்

அதுகண்டு வந்தேன் ஆனதொரு சுந்தரியே
வாதுராசா நீயானால் வடிவெனக்குக் காட்டுமென்றாள்
அப்போது வாதுராசா ஆகாச மாய்வளந்தான்
வாதுராசா வைக்கண்டு வகையாகத் தெண்டனிட்டுப்
பாட்டாநீ இப்பப் பயணமே போகவேணும்

அத்தை மகனுக்கு ஓலைகொண்டு போகவேணும்
கட்டுச்சோறு கட்டுகுறேன் கடும்பயணம் போகவேணும்

நல்லதென்று சொல்லி நானூத்திக் கலஅரிசிச்
சோறுமிகக் கட்டத் துயில்வேணும் என்றார்கள்
அப்போது வாதுராசா அடவாய் எழுந்திருந்து

பெண்கொள்ள வாறமென்று பெரியகூடாரம்
போட்டார்கள்
திரியோதனன் கூடாரம் திக்கெங்குந் தான்பாத்துச்
சேரவே சுண்டிவிட்டாள் தெய்வலோகஞ் சேர்ந்ததுவே
கட்டுச்சோறு கட்டினார்கள் கருமலைக்கி ஒப்பாக
ஓலை எழுதுமம்மா ஒருநொடியில் போகவேணும்

நல்லதென்று சுந்தரியாள் நாலோலை தானெடுத்து
வாரி எடுத்தாளே வடிவான சுந்தரியாள்
அஞ்சேடு தானெடுத்து ஆண்டவனைத் தான்நினைந்து
மாசமும் தேதியும் வரிசையாக எழுதுகுறாள்
அத்தைமகன் மச்சினர்க்கு அடவாகத்
தெண்டனிட்டேன்

தெண்டனிட்ட சுந்தரிக்கிச் சேதமிக வாராமல்
திரியோ தனன்பாவி தீங்கு தனைநினைந்து
வனம்போன பாண்டவர்கள் வாறதில்லை என்று
சொல்லி
மாயன் பெருமாளும் வகையாகச் சம்மதிச்சு
உன் கூத்திமகன் லெக்கணர்க்குப் பெண்குடுக்கச்
சம்மதிச்சுங்

பங்குனி மாசம் பதினஞ்சாந் தேதியிலே
வெள்ளிக் கிழமை விசைய திசமியிலே
கலியாண முடிக்கக் கடுகவே வாறார்கள்
ஓலைகண்ட நாழிகைக்கு ஒருநொடியில் நில்லாதே
ஆளுவந்து சொன்னால் அரைநொடியில் நில்லாதே

ரெண்டேடு தானெடுத்து நலமாகத் தானினைந்து
எப்போதும் போலே இருக்கிற பெண்ணைல்லகாண்
ஈனாத வாழை இளவாழைக் கண்ணதுபோல்
காயாத வாழை கருவாழைக் கண்ணதுபோல்
கய்யிரண்டுங் காலுரெண்டும் வாளுருவி
விட்டாப்போல்

பல்லுத் திருவழகு பார்வதிக்கு ஒப்பிடலாம்
நெத்தித் திருவழகு நிலாப்பிறைக்கி ஒப்பிடலாம்
மார்புத் திருவழகு வண்ணம் பதிச்சாப்போல்
மூக்குத் திருவழகு முத்துப் பதிச்சாப்போல்
கையழகும் காலழகும் ராச்சியத்தில் கண்டதில்லை

முன்னழகும் பின்னழகும் முத்துப் பதிச்சாப்போல்
ஓலைகண்ட நாழிகைக்கு ஒருநொடியில் வரவேணும்
மூணானேடு தானெடுத்து மூர்க்கமுடன் தானெழுதி
என்னவென்று சொல்லி எழுதினாள் சுந்தரியாள்
உங்களுட தாயாரும் எங்களுட தாயாரும்

முக்காலும் பிள்ளையில்லை மூணுதிரம் பிள்ளையில்லை
பிள்ளையில்லை என்று பெருமாளும் ஓடிவந்து
சித்திர புத்திரரைத் திக்கென்று 'கேள்க்கவந்தார்
மூக்காலும் பிள்ளையில்லை மூணுதிரம் பிள்ளையில்லை
என்றுதான் சொன்னதுக்கு இயல்பான மாயவனும்

பரமேஷ் பரன்கிட்டப் பக்கமே ஓடிவந்து
அப்போது ஈஸ்பரனும் அடவாக ஏதுசொல்வார்
மாயன் பெருமாளே வந்தவகை சொல்லுமென்றார்
பிள்ளையு மில்லாத டெருந்தவசு கேள்க்கவந்தேன்
மைந்தனு மில்லாத மனக்கவலை கேள்க்கவந்தேன்

பிள்ளைவரங் கேளாத பேசாதே போங்கஹணும்
அதுவே தெனைக்கேட்டார் ஆயன் பெருமாளும்

அப்போது ஈஷ்பரரும் அடவாகச் சொல்வாராம்
உன், தங்கையரும் தேவியரும் தனிச்சுவழி போகையிலே
புனலாத்தாங் கரையோரம் நந்தவனம்
போட்டிருக்கும்

பண்டாரத் தையழைத்து நந்தவனம் பாழாகிப்
போனதென்ன
குடுப்பாருமில்லாமல் நந்தவனம் பாழாகிப் போச்சுதம்மா
அப்போ திருவருமே அடவாகத் தான்பாத்து
அஞ்சுபொன் தான் கொடுத்து அடவாக
அடையுமென்றார்
அந்தப் படிக்கி அடைச்சானே பண்டாரம்

சிங்காரப் பூந்தோட்டம் சிறப்பாக வாழ்ந்துதப்போ
அந்தநல்ல தோட்டத்தை ஆயன்பசுவு அழித்துதுகாண்
தோட்டம் மிகப்பார்க்கச் சுபத்திரியும் லெட்சுமியும்
வந்துமிகப் பார்த்து வகையாக ஏதுசொல்வார்
தோட்டங்க ளெல்லாம் சுத்தி யழிந்ததென்ன

ஆத்தாளே தாயே அதுகேட்டா யில்லையென்றான்
மாயன் பசுவாலே நந்தவனம் பாழாகிப் போச்சுதம்மா
அந்தப்பசு தோட்டத்தில் ஆகாசமாய்த் தான்விழுந்து
பசுவுவா ராதபடிக்கிப் பணிக்குமிகச் சொல்லுகிறோம்
செப்புவசி யுருக்குவசி சேர்ந்ததொரு யிரும்புவசி

மற்றுபசி யும்பசுவு குதிக்கு மூன்பாக
அவர்கள்சொன்ன படிக்கித் துருசாக நட்டாராம்
அந்தவசி யிலேபசுவந்து அலறி விழுந்திடுமாம்
அந்தப் படிபாவஞ் செய்தவர்க்குப் பிள்ளையில்லை
சங்கு சக்கரமும் அடகுமே தான்கொடுத்து

வரம்வாங்கிக் கொண்டு வந்துவிட்டார் அப்போது
மூணாநாள் குளிகுளித்து இருபேரும் போகையிலே
அந்தநல்ல வேலையிலே ஆனதொரு மாயவரும்

காத்து மழைபோலே வந்தாரே மாயவரும்
மழைக்காத்துக் குள்ளேஒரு மரத்தடியில்
வந்தார்கள்

மரத்தடியில் வந்து வகையாக நிற்கையிலே
துளுத்த மரமுந் துளிர்வாங்கிப் பூவாங்கிப் பிஞ்சாலே
காயும் பழமாகிக் கனிந்துபழம் வீழ்ந்ததுவே
விழுந்த பழத்தை விருசாகத் தானெடுத்துக்
காவேரிக் கரைதனிலே கனியைமிகக்
கொண்டுவந்து

கொட்டை யொருத்திதின்றால் தோலை
ஒருத்திதின்றாள்
நங்கையரும் நாத்தியரும் நலமாகத் தான்பேசி
உன்வயற்றில் ஆண்பிறந்தால் என்வயற்றில்
பெண்பிறந்தால்
ஒண்ணுக்கு ஒண்ணு உத்துருமை தாறமென்று
கோதா புரியில் கெங்கையைச் சாட்சிவைத்து

ஆலா மரஞ்சாட்சி ஆட்டிடையன் தான்சாட்சி
பத்துமாசம் சுமந்திருந்து பாலகனைப் பெத்தெடுத்தார்
விரைதின்ற படியினாலே வாளபிமன் தான்பிறந்தான்
தோல்தின்ற படியினாலே சுந்தரியும் தான்பிறந்தாள்
அப்போது சுபத்திரியாள் ஆனதொரு சங்குப்பாசி

கொண்டுவந்து ஓங்கள்தாயார் கொடுத்தாளே
அப்போது
சங்கடியும் தேவியென்று சகலருமே தானிந்தப்
பெண்ணல்லவோ
இந்தப்படி அபிமன்னன் தேவியென்று அனைவருமே
தானறிய
நாலேடு தானெடுத்து நன்றாகக் கைப்பிடித்து
அத்தைமகன் மச்சினரே அடவாகச்
சொல்லுகிறேன்

பள்ளிக்கூடத்தில் இருபேரும் பாங்காய்ப் படிக்கையிலே
பள்ளிக்கூடம் விட்டுப் பழையசோத்துக்கு வருகையிலே
சாதமுஞ்சாப் பிட்டுத் தனிச்சு வருகையிலே
அக்கிரார வீதியிலே அருந்துதியாள் வருகையிலே
ஓரக்கிணத்தை யெட்டிப் பார்த்தானே அப்போது

பொன்னா லெழுத்தாணி பிடிநழுகி வீழ்ந்ததுவே
அந்தநல்ல வேளையிலே அடவாகத் தானுமப்போ
முத்தான கண்ணீரை முதுமார்பில் சோரவிட்டேன்
பவளம்போல் கண்ணீரைப் பக்கமே சோரவிட்டேன்
நான் அழுது புலம்பி அக்கிரார வீதியிலே

நிற்கிற வேளையிலே நீர்தானும் அப்போது
வளகிடாய் மேலேரி வந்தீரே அப்போது
அழுகுற சேதியென்ன அடவாகச் சொல்லுமென்றீர்
பொன்னால் எழுத்தாணி பூமியிலே சோரவிட்டேன்
எந்தன் எழுத் தாணிஇந்தக் கிணத்திலே
வீழ்ந்ததுவே

எழுத்தாணி போனால்இனிக் கிடையாதோ பூமியிலே
எழுத்தா ணிக்கிபதில் இப்பவே நான்தாறேன்
அதுக்குவே றெண்ணாதே ஆனதொரு பெண்ணே நீ
எத்தினைதான் சொல்லி இதமாய் உரைத்தாலும்
எந்தன்னெழுத் தாணி எடுத்தாக்கால் போயிவிடும்

நீயே புருசன் நானுனக்குப் பெண்சாதி
அந்தமொழி கேட்டு ஆனதொரு வாளபிமன்
சிவனேயென்று வில்வாங்கிச் சீக்கிரமாய்ப் போட்டீரே
விட்டகணை போயிவெகு வேகமாய்த் தான்பிடித்துக்
கொண்டுவந்து தானும் கொடுத்தீரே அப்போது

அப்படி அடையாளம் ஆனகணையாழி மோதிரமும்
உன்கைக் கணையாழி என்கையிலே இருக்குதுகாண்
என்கைக் கணையாழி உன்கையிலே இருக்குதுகாண்
இதுவுமொரு அடையாளம் எழுந்னால் சுந்தரியாள்
அஞ்சேடு தானெடுத்து அடவாகக் கைப்பிடித்து

என்னமென்று சொல்லி எழுதினாள் சுந்தரியாள்
திரியோ தனன்பாவி திரவியத்தைக் கொண்டுவந்து
கொள்ளத்துணிந்தான் மாயன் குடுக்கவே சம்மதித்தார்
கலியாண சோபனங்கள் கடுகவே ஆருதிப்போ
அரைக்கீரை சிறுபாத்தி அறுக்கவே பக்குவங்காண் 500

சிறுகீரை செய்ய வாறானே லெக்கணனும்
சிறுகீரை சிக்காது தீயில் குதித்திடுவேன்
நல்ல பழத்துக்கு நரிவந்து துலாவுதுகாண்
நல்லகனி சிக்காது நல்லகனி ஈந்திடுவேன்
காவல் அழியுதுகாண் கண்ணாளா தேசமெல்லாம் 505

காவல் அழியாமல் கண்ணாளா வந்ததுவும்
அத்தைமக னானால் அரைச்சினத்தில் வந்துவிடும்
மாமிமக னானால் மாயமாய் வந்துவிடும்
உன்கைக் கணையாழி என்கையிலே தானிருக்க
என்கைக் கணையாழி உன்கையிலே தானிருக்கக் 510

கணையாழி மோதிரமே கணவனென்று நானிருந்தேன்
அக்கினியை வளத்து அதிலே குதித்திடுவேன்
ஓலைகண்ட நாழிகையில் ஒருநொடியில் வரவேணும்
ஓலைப்பிள்ளை போலே தீயில் குதித்திடுவேன்
கொண்டபெண்ணை விட்டாலும் குறித்தபெண்ணை
விடுவதில்லை 515

கடைசுட்டு ஓலை கடுகவே தானெழுதி
அஞ்சேடு தானெடுத்து அடவாகத் தானுருட்டி
அஞ்சேட்டு மேலே அரக்குமுத்திரி தான்போட்டுக்
கொண்டுவந்து சுந்தரியாள் கொடுத்தாளே ஓலைதனை
வாதுராசா வாங்கி வகையாகக் கைப்பிடித்துக் 520

கட்டுச்சாதம் வாங்கிக் கடும்பயணம் போகையிலே
மாயன் பெருமாள் வழிமறிக்க வேணுமென்று
பயணத்துக்கு முன்பாகப் பாங்காக வந்துநின்று

திரும்பியே வாதுராசா திக்கென்று ஓடிவந்து
மாயன்மகள் சுந்தரிக்கு மறுவார்த்தை
தான்சொல்லி

அந்த மொழிகேட்டு ஆனதொரு சுந்தரியாள்
மாயன்வித்தை காணும் மயக்கமடா ராசாவே
அதுக்குவே ரெண்ணாதே ஆனதொரு பாட்டாநீ
நல்லதென்று சொல்லி வாதுராசா தான்நடந்தான்
ஊரு கடந்து உத்திராட்சப் பூமிவிட்டு

நாடு கடந்து நடுவழியே போகையிலே
வங்கு நரிபோலே வந்தாரே மாயவனும்
அந்த வனங்கடந்து அப்பாலே போகையிலே
ஊசி வனங்கடந்து உத்திராட்சப் பூமிவிட்டுச்
சிள்ளென்ன காடும் செடியும் புனாந்திரமும்

போறவழி தனிலேஒரு புதுக்குளமி ருந்ததுவே
அந்தக் குளத்தில் ஆமையிலே ஆயிரமாம்
முதலையிலே ஆயிரமாம் மீனும் ஒருகோடி
அப்படியே தானிருக்கும் ஆன குளமுமது
அந்தக் குளத்தை அடவாகத் தான்கலக்கி

ஏரியைத் தானுடைத்து எதுக்கவைத்தான் வாயுதனை
சாதமுந் தின்று தகையாறிப் போனபின்பு
அந்த வனங்கடந்து அப்பாலே போகையிலே
வாளால் அபிமன்னன் மணல்குமித்து விளையாடுகிறான்
வெள்ளை நவல்பழமும் மெத்தவே கொண்டுவந்து

ஊரார் புகழுடைய தர்மம் பெரியப்பனுக்கு
ஊரார் புகழுடைய உற்றபுகழ் பீமனுக்கு
ஆளா லழகன் அருச்சுனனார் என்தகப்பன்
நகுலன் சகாதேவன் நல்ல துரோபதைக்கும்
அஞ்சு நல்ல பேர்க்கு அஞ்சிலையும் தான்போட்டுப்

பாஞ்சாலி துரோபதைக்கிப் பக்க மிலைபோட்டு
அஞ்சு படையல்சுத்தி யாடி வருகையிலே
சுளிகாத்துப் போலே சுழத்திவிட்டான் வாதுராசா
வந்த பசங்களெல்லாங் காத்து வாரிக்கொண்டு
போனதுவே
வாளால் அபிமன்னன் வாளெடுத்துக் கச்சைகட்டி

வாது ராசாவை வகையாகத் தான்பாத்துக்
காலடியில் ஓலையைத்தான் கடுகவே போட்டுவிட்டான்
ஓலையைக் கண்டார் உற்றபுகழ் வான்வீமன்
ஓலையைக் கைப்பிடித்து ஊருக்கு வாறானாம்
மாயனும் வந்து வள்ளுவன்போல் வடிவானார்

அப்போது வாளபிமன் அடவாகத் தான்பார்த்து
எங்கை யிருந்து எவடத்துக்குப் போறியடா
தூரம் வடக்கே துவாரகாபுரியி லிருந்துவந்தேன்
கண்டதொரு காரியங்கள் கணக்காகச்
சொல்லுவேன்நான்
அப்போது வாளபிமன் அடவாகத் தான்பார்த்து

நீ ஓலைகொண்டு போறதை ஒருவிடத்தில் காட்டாதே
தங்களுட தாயார்கிட்ட தப்பாமல் கொண்டுசென்று
குடுவென்று சொல்லி வள்ளுவனும் போனானாம்
நல்லதென்று சொல்லி நடந்தானாம் வாளபிமன்
தாயாரைக் கண்டு தப்பாதே தெண்டனிட்டுக்

கொண்டுவந்து ஓலையைக் குடுத்தானாம் வாளபிமன்
போசனமும் பண்ணுமப்பா புத்தியுள்ள கண்மணியே
அந்தநல்ல ஓலையை அடவாகப் பாத்தாளாம்
மாயன்மகள் கையெழுத்து மகனுக்குக் கேடாச்சு
பாவிமகள் கையெழுத்து பாருலகில் கண்டதில்லை

இந்தெழுத்துக் கண்டால் இருப்பானோ பூமியிலே
கொண்டுவந்து ஓலையைக் குறுக்கே கிழிச்செறிந்தாள்

என் தாயே மாதாவே ஓலைச் சேதிதனைச் சொல்லுமம்மா
உங்கள் தகப்பமார் ஐவரும் வனவாசம் போகையிலே
விசையாபுரி அம்மனுக்கு அஞ்சு விளக்குவைத்தார்

அவர்கள் ஆயுதமும் தீப்பு அடைக்கலமாய் வைத்தார்கள்
அந்த அம்மனுட கோவிலுக்குப் போய் அறிந்து வா என் மகனே
நல்லதென்று சொல்லி நடந்தானே வாளபிமன்
வாளெடுத்துக் கச்சைகட்டி வந்தானே வாளபிமன்
பத்திர காளியுட கோவில் சுத்திப் பதினாயிரஞ் சடாமுனியும்

ஒத்தைச் சடாமுனியும் ஒருபல்லு ராச்சதனும்
மேட்டிலே போட்டிருக்கும் வீர முனிதனையும்
அந்தமேட்டுத் தடமாக வாறானே வாளபிமன்
கண்டுது அந்தமுனி கண்கள் பொறிபறக்க
ஆரடா வாறவன் அடிக்கிறேன் தப்பாமல்

வாளால் அபிமன்னன் வகையாகக் கிட்டவந்து
எட்டிச் சடைபிடித்து எறக்க அறுத்துவிட்டான்
இருந்த முனிகளெல்லாம் ஏகமாய் ஓடியதே
அம்மனுமே கண்டு அடைத்தாளே தன்கதவை
அம்மனுட சன்னதிக்கு அடவாக வந்துநின்று

தாயே உமையவளே சிவசங்கரியே மாதாவே
என்றுசொல்லி வாளபிமன் இதமாக நிற்கையிலே
ஆரடா முனியை அடிச்சு மிரட்டினவன்
தாரார் புகழுடைய தர்மருக்கு நேரிளையோன்
அருச்சுனன் குமாரன் அபிமன்னன் நானல்லவோ

அப்போது பத்திரகாளி அடவாக ஓடிவந்து
வாரி எடுத்து வர்ணப் பசுங்கிளியே
தேத்தி யெடுத்து திரவியமே எங்கைவந்தாய்

வந்ததொரு காரியத்தை வகையாகச் சொல்லுகிறன்
உனக்கு எதிராய் முனியை அனுப்பிவைத்தேன்

அப்பா மகனே அறிவுள்ள கண்மணியே
வந்ததொரு காரியத்தை வகையாகச் சொல்லிவிடும்
அய்வர் வனவாசம் அடவாகப் போகையிலே
அய்வருட ஆயிதமும் அடைக்கலமாய் வைத்தாரப்பா
அந்தநல்ல சேதி அடவாகக் கேட்டுவந்தேன்

அப்போது கீழுலகில் அடவாகக் கூட்டிப்போய்த்
தலைவாசல் தானதிறந்து காண்பிச்சாள் அம்மனுமே
அஞ்சு விளக்கு அவியாமல் எரியுதப்பா
அபிமன்னா ஒருவார்த்தை சொல்லநீ கேளாய்
அய்வர் வனவாசம் அடவாகப் போகையிலே

என்கோவிலுக்கு வந்து கும்பிட்டுத் தெண்டனிட்டு
அஞ்சுபேர் ஆயுதமும் அடைக்கலமாய் வைத்தார்கள்
பனிரெண்டு வருஷம் பாரவனம் போறமப்பா
அஞ்சுபேரில் ஒருவருக்கு அவகேடு வந்தாக்கால்
அதுக்கு விபரமென்ன ஆனதொரு தாயாரே

அஞ்சு விளக்கிலயும் அஞ்சுபொஷ்பந் தான்போட்டுத்
தாரார் புகழுடைய தருமர் விளக்கிதுகாண்
வெற்றி மதயானை வீமனுட தன்விளக்கு
வைரர் புகழுடைய அருச்சுனனார் தன்விளக்கு
நாலுதிக்கும் ஓடிவெட்டும் நகுலனுட தன்விளக்கு

சாஸ்திரக் கொடிவேந்தன் சகாதேவன் தன்விளக்கு
பாஞ்சாலி துரோபதையாள் பத்தினியாள் தன்விளக்கு
அந்தநல்ல பொஷ்பம் அடவாக வாடாமல்
அய்வருக்குச் சேதமில்லை அழிவொருநாள் வாறதில்லை
அஞ்சாதே போடா அதுக்குவேறெண்ணாதே

உனக்குமொரு ஆபத்தானால் உடனே நினையுமடா
ஆபத்துக்கு ஆயுதமும் அடவாய்க் குடுப்பேண்டா
அஞ்சாதே போடா நீ ஆனதொரு வாளபீமா
நல்லதென்று சொல்லி நடந்தானே வாளபீமன்
ஊசி வனங்கடந்து உத்திராச்சத் தேசம்விட்டு

ஆனை நந்தி உள்புகுந்து அப்போது வாள்வீமன்
சுபத்திரா தேவியைச் சுத்திவந்து தெண்டனிட்டுத்
தெண்டனிட்ட மகனைத் திக்கென்று தானெடுத்துப்
போனதொரு காரியத்தைப் புண்ணியனே சொல்லுமய்யா
தாயேநீ சொன்ன சோதினைகள் மெய்யாச்சு

ஓலைச் சேதிதானும் உள்ளபடி சொல்லுமம்மா
அப்பா மகனே அறிவுள்ள புத்திரனே
ஓலைச் சேதிதானும் ஒளியாமல் சொல்லுதேன்
அப்பவே வாளபீமன் அடவாகக் கேட்டுநின்றான்
அப்போ சுபத்திரியாள் அடவாகச் சொல்லுகிறாள்

ஓலையிலே தானும் ஒன்றுமில்லை யென்றுசொன்னான்
ஓலை குடுக்காட்டி உயிர்ச்சேதம் வந்துவிடும்
அந்த மொழிகேட்டு ஆன சுபத்திரியாள்
வனம்போன பாண்டவர்கள் வாறார்கள் என்றுசொல்லி
நாடாள வாறமென்று நல்லோலை வந்துதய்யா

ஊரோடே வாறமென்று உத்தோலை வந்துதய்யா
அய்வருட ஓலையை ஆத்தாளே தந்துவிடும்
அய்வரைக் காணாட்டி அந்த ஓலையைக் காணவேணும்
தாதியரைத் தானழைத்துத் தாருமென்றான் ஓலைதனை
ஓலையைக் காணாமல் ஒரு கிழிந்தோலை
கண்டனப்பா

கிழிந்தோலை தன்னைக் கொண்டுவந்து கைக்குடுத்தாள்
ஓலையைக் குமித்து ஒருநொடியில் தெண்டனிட்டு

பத்தினியாள் ஓலையானால் ஒன்றாய்ப்
பொருந்தவேணும்
உத்தமியாள் ஓலையானால் ஒன்றாய்ப்
பொருந்தவேணும்
அய்வர் தனைநினைந்து அப்போது வாளபிமன்

ஆக்கரித்துப் பல்கடித்து அமட்டி எழுந்திரிந்து
வாளை யெடுத்து மகாமேரு நோக்கிவிட்டான்
வாளு வருகையிலே மாயன் விலக்கிவிட்டார்
ஓலைச் சுருளும் ஒன்றாய்ப் பொருந்தியதே
அஞ்சாகட்டுக் கட்டி அரக்குமுத்திரி தான்போட்டுச்

சுருளவிழ்த்துத் தானும் தோற்றமுள்ள வாளபிமன்
வாசித்துப் பார்த்து வாளபிமன் ஏதுசொல்வான்
காசிக்குப் போனாலுங் கருமந் துலையாதே
நிக்கத் தரிக்காது நிலத்தில்கால் பாவுதில்லை
வாளெடுத்துக் கச்சைகட்டி மான்துளிர்போல்
சல்லடமிட்டு

அப்பா மகனே அடவாகச் சொல்லுகுறேன்
உங்கள், மாமனுட சேதி வகையறிந்து நான்வாறேன்
சிங்கமுகப் பல்லாக்குச் சீக்கிரமாய்த் தானேறித்
தாதியரும் பாங்கியரும் தனக்கேத்த தோழியரும்
ஆனைகுந்தி விட்டு அப்பாலே போகையிலே

மூங்கி வனங்கடந்து முந்நூத்திக் காதவழி
சில்லென்ன காடும் செடியும் புனாந்திரமும்
சங்கவ ராபுரியில் தானாக வந்திறங்கி
அண்ணன் அரமனைக்கி அதிகதலி வாறாளே
மாயனைக் கண்டு வகையாகத் தெண்டனிட்டுத்

தெண்டனிட்ட தங்கையரைத் திக்கென்று தானெடுத்து
வந்ததொரு காரியத்தை வகையாகச் சொல்லுமம்மா
அரியோ தனன்பாவி சேரத் துரத்திவிட்டான்
அப்படிப்போல் என்னை அகலத் துரத்தினியோ
உக்ரன்மகன் சுந்தரியாள் ஓலை யெழுதிவிட்டாள்

அதுகண்டு ஓடிவந்தேன் அண்ணரே புத்திசொல்லும்
நல்லது தங்கையரே நான்சொல்லக் கேளுமம்மா
கலியாண மென்று சொன்னதினால் சேதமில்லை
பெண்ணிருக்கும் வீடு பெரியதாசி மனையல்லவோ
வெந்நீர் கொதித்து வீடுதான் வேகாது

ஆருதான் சொன்னாலும் அஞ்சாதே தங்கையரே
நங்கையுண்டு நாத்தியுண்டு நமக்குத் தெரியாது
அண்ணனுட தேவிகிட்ட அடவாக வந்தாளாம்
வந்ததொரு நங்கையரே வாய்க்கருசிக் கில்லையோதான்
கட்டின தாலிக்கிக் கடமணிக்கி மில்லையோதான்

வெய்யிலிலே எங்கைவந்தாய் வெக்கங்கெட்ட நங்கையரே
எப்படித்தான் சொன்னாலும் என்னுருமை போகாது
உருமையென்று சொன்னதுக்கு உனக்கேத்த புத்திசொல்வேன்
பெண்குடுக்கச் சம்மதித்த பிறசாட்சி யுண்டோதான்
சாச்சியென்று சொன்னாயே திட்டவட்டஞ் சொல்லாட்டி

சாச்சியு மானால் தருவேண்டி பெண்ணுனக்கு
இருவரெண்டு பேரும் வழக்குக்குப் போனார்கள்
கோதாபுரி கெங்கைகிட்டப் போனார்கள் அப்போது
வத்தின கெங்கை மகாமேரு போல்வளந்தால்
அப்போது நானும் அடவாகப் பெண்கொடுப்பேன்

கெங்கா புரியம்மா கீர்த்தியுள்ள என்தாயே
அண்ணாசொன்ன வார்த்தை அபத்தமே யானக்கால்
இருக்குற தண்ணீர் இடைவத்திப் போகவேணும்
சொன்னசேதி மெய்யானால் சோதிலையாய்ப் பெருகவேணும்
அந்தப் படிக்கி ஆண்டவனைத் தெண்டனிட்டு

வடக்கே கரிக்கி மகாமேரு பொங்கியப்போ
காவேரி யம்மன் கைநீட்டிச் சொன்னாளாம்

சாட்சியும் உண்டு தங்கச்சிபெண்ண ணைக் குடுத்துவிடும்
அப்படிச் சொல்லி அடவாய் மறைந்ததுவே
ஆமடி மருந்துக்கள்ளி அறிவேண்டி உன்சேதி

ரண்டாவது சாட்சி நன்றாக வந்தார்கள்
ஆலாமரமும் அமந்த விநாயகனும்
அவர்கிட்ட வந்து அடவாகத் தெண்டனிட்டு
எனக்குச் சாட்சி இதமாகச் சொல்லவேணும்
என்றுசொல்லிச் சுபத்திரியாள் இதமாகச் சொன்னாளாம்

அப்பவே லெட்சுமியாள் அடவாகச் சொன்னாளாம்
தழைஞ்சமரம் இலையுதிர்ந்து தரைநீண்டியேகுடுத்தால்
அப்படியே தானும் அடவாகப் பெண்குடுப்பேன்
நல்லதென்று சுபத்திரியாள் விநாயகனைத் தான்தொழுது
இடசாரி சுத்தி வலசாரி தெண்டனிட்டு

அண்ணா சொன்ன வார்த்தை அபத்தமே யானாக்கால்
பெண்ணுமிக வேண்டாம் பேசாமல் போறேன்நான்
ஆண்டவனைத் தான்நினைந்து அடிதொழுது தெண்டனிட்டு

அப்போது ஆலாமரமும் அடவாகத் தான்பாத்து
அப்போ தழையுதிர்ந்து தரைதீண்டிக் கொடுத்திடுமாம்

அப்போது லெட்சுமியாள் அடவாகச் சொல்வாளாம்
மருந்துக்கள்ளி என்றறியேன் வந்தேனே உன்பிறகே
என்றுசொல்லிப் போட்டு நடந்தாளே லெட்சுமியாள்
அப்போது ஓடிவந்து அடவாகச் சொல்வாளாம்
இன்னமொரு சாச்சி யுண்டேதான் நங்கையரே

அப்போது தங்கையர்க்கு அவகேடு வருகுதென்று
மாயன் பெருமாளும் வந்தாரே இடையனைப்போல்

ஆரடா அண்ணாவி அங்கைமிகப் போறவன்தான்
கிட்டமிக வந்து கேட்டாயோ அண்ணாவி
அண்ணக்கிப் போகையிலே ஒன்னோடே
ஒருசாட்சி சொன்னதுண்டு

உண்டுஇல்லை யென்று ஒளியாமல் சொல்லிவிடும்
அப்போது ஆட்டிடையன் அடவாகக் கிட்டவந்து
இருவரெண்டு பேரும் இருதடமாய்ப் போகையிலே
உன்வயத்தில் ஆண்பிறந்தால் என்வயத்தில் பெண்பிறந்தால்
உத்துருமை தாறமென்று கைபோட்டுச் சொன்னதுண்டு

அதுக்குஎன்னைச் சாட்சிவைத்த அடையாளம் உண்டுமம்மா
என்றுதான் சொன்னதுக்கு இயல்பான லெட்சுமியும்
நரைத்தலையை நாயிசிக்க நன்றாகச் சொன்னியடா
உங்களுட யிடக்குலங்கள் உனக்கேதான் சொல்லுமடி
என்றுசொல்லிப் போட்டு இயல்பாகப் போகையிலே

பெண்குடுக்கச் சொல்லிப் பிறகேதான் போயிழுத்தான்
ஒருவர்மயிர் ஒருவர்கையில் ஓயாமல் சண்டையிட்டார்
அந்தநல்ல வேளையிலே ஆனதொரு சுந்தரியாள்
அத்தைதான் வந்ததை அடவாகத் தான்கேட்டுச்
சிங்கமுகப் பல்லாக்குச் சேரவே யேறிக்கொண்டு

ஓட்டமாய் ஓடிவந்து ஒருநொடியில் தான்புகுந்து
மாமியைத் தூக்கிவிட்டு மாதாவைத் தான்பிடித்து
அப்போது தாயாரை அடவாகத் தான்பிடித்து
திண்ணாலே குத்தும் விழுந்தால் உதைகளுமாய்
ஆத்தாளைத் தள்ளி அத்தையரைக் கூட்டிவந்து

சிங்கமுகப் பல்லாக்குச் சேரவேயே றிக்கொண்டு
அரமனைக்கி வந்து அடவாய் எளப்பாறி
ஏலமும் போட்டு இளநீர் தனைக்குடித்து

சம்பங்கி எண்ணெய்கொண்டு தலைகோதிச்
சிணுக்கெடுத்துச்
சாப்பிட்டு மேநல்ல தயவாய் எளப்பாறிப்

போறேண்டி சுந்தரியே புத்தியுள்ள கண்மணியே
கலியாணச் சேதி கலக்கமில்லை விட்டுவிடும்
அத்தையரே நீயும் அடவாகக் கேளுமின்னம்
ஆரியகுல வங்கிஷத்தில் அழிவுவர லாகாது
கொண்டபெண்ணை விட்டாலுங் குறிச்சபெண்ணை
விடுவதில்லை

அந்த மொழிகேட்டு ஆனதொரு சுபத்திரியாள்
ஏதுக்கும் அஞ்சாதே என்தாயே சுந்தரியே
என்றுசொல்லிப் போட்டு பல்லாக்கு ஏறினாள்
சுபத்திரியாள்
ஊரு கடந்து உத்திராட்சப் பூமிவிட்டு
ஆரண்ட வனங்கடந்து அயிரா பதம்புகுந்து

அந்த வனங்கடந்து ஆனைசந்தி உள்புகுந்து
வாளாள் அபிமன்னன் வகையுடனே அப்போது
வந்ததொரு தாயாரை வகையாகத் தெண்டனிட்டுப்
போய்வந்த சேதி புதுமைதனைச் சொல்லுமம்மா
போனதொரு சேதி பெண்கேட்டு வந்தனப்பா

மாயன்மகள் சுந்தரியாள் வார்த்தைகள் மெத்தவுண்டு
துடையுங் கழுத்துந் தூணுப் பருத்தாப்போல்
காலுந் தலையும் கரடி மயிரதுபோல்
என்னோ டுடன்பிறந்த இன்னமொரு அண்ணனுண்டு
அவன்வயத்துப் பிள்ளையானால் அழகுமெத்தத்
தம்பியரே

அன்னக் கிளிபோல் அவளிருப்பாள் தம்பியரே
அத்தப் பெண்ணைநானும் அடவாகக் கேட்டுவாறேன்
எடப்பெண் கிடையாதோ என்மகனே வாளபிமா
நீயும் இடச்சியல்லோ உன்மகனும் இடையனல்லோ
மாயன் மகள்வார்த்தை மாதாவைச் சொல்லாட்டிச்

சங்குதுவார காபுரிக்கித் தாயாரே போய்வாறேன்
அப்பா மகனே அன்பாகச் சொல்லுகுறேன்
அண்ணாரைக் கண்டு அடவாகப் பேசிவந்தேன்
தேவியரைக் கண்டு சேதியெல்லாஞ் சொல்லிவந்தேன்
வேறையொரு காரியங்கள் வினைவாற தில்லையப்பா

என்றுசொல்லிப் போட்டு இருந்தார்கள் அப்போது.
அந்தநல்ல வேளையிலே ஆனதிரி யோதினனும்
லக்கண குமாரனுக்கும் நல்லதொரு சுந்தரிக்கும்
கலியாண ஓலை கடுசாய் எழுதிவிட்டான்
மன்னர் படைசூழ மந்திரிமார் தான்சூழ

நாளை வெள்ளிக் கிழமை விசைய தசமியிலே
பங்குனி மாசம் பதினஞ்சாந் தேதியிலே
கலியாண மென்று கனக முரசறைந்தார்.
குருச்சேத்திர பூமியிலே கூடாரம் போட்டார்கள்
அத்திபுரந் தன்னில் அடவாக வந்திறங்கி

முத்துக் குடைமன்னர் முப்பதுநா றாயிரமாம்
பவளக் குடைமன்னர் பத்துநா றாயிரமாம்
பேச்சுமூச் சறியாத பேய்வடுக ரொருகோடி
கீச்சுமூச் சறியாத கிங்கிலிய ராயிரமாம்
மலுக்கர் துலுக்கர் மகாசேனை யொருகோடி

திரியோ தனன்தேருந் தென்னவர்கள் தன்தேரும்
கன்னனுட தேரும் காங்கையனார் தன்தேரும்
சகுனி யுடதேரும் சல்லியனார் தன்தேரும்
துரோணருடதேருந் துஷ்டாச தரன்தேரும்
விஷ்ணுமா சாரியார் விதமாகத் தேரேறி

அசுவத் தாமாவும் ஆனவெள்ளித் தேரேறிக்
கொன்றைமாலை தேத்தராசன் கோடிமன்னர் தான்கூடித்
தேவேந் திரன்தேரும் தேவர்கள் தன்தேரும்
மன்னர் படைசூழ மகுட வரத்தினர்சூழ்
எக்கோடி சேனைபடை எல்லோருங் கூட்டமிட்டுக்

கருப்பு மிகுடாலுங் கணக்கிடக் கூடாது
வெள்ளி மிகுடாலும் விலைமதிக்கக் கூடாது
அனுமந்த டாலும் அளவறுக்கக் கூடாது
எழுத்துமிக டாலும் எண்ணைத் துலையாது
ஆனையொரு கோடி அடவாய்ப் படையெடுத்து

ஒட்டையி லொருகோடி ஒக்கப் படையெடுத்து
வெள்ளிரதம் ஆயிரமாம் வெங்கலத்தேர் ஆயிரமாம்
பதினக்கு ரோணிசேனை பாங்காய்ப் படையெடுத்து
பீரங்கி ஆயிரமாம் பெரியகுழல் ஆயிரமாம்
பாணங்கள் ஆயிரமாம் பாரிவண்டி ஆயிரமாம்

சங்குதுவரகா புரிநோக்கித் தானே படையெடுத்து
மானத்துமீன் பூத்தாப்போல் மன்னர் படையெடுத்துக்
குருச்சேத் திரப்பூமி கூடவே தான்கடந்து
ஆரண்ட வனங்க டந்து ஆயிரம் பதங்கடந்து
செந்தாள் பறக்கிறதுந் தெய்வலோகஞ் சேருதுகாண்

கருந்தூள் பறக்கிறதுங் கருமலைகள் தெரியவில்லை
எதிர்பட்ட மலைகளெல்லாம் இலவம்பஞ் சானதுவே
கால்பட்ட மலைகளெல்லாம் கடுகுபொடி யாகுதுகாண்
சூரியனுந் தெரியவில்லை சந்திரனுந் தெரியவில்லை
மூங்கி வனங்கடந்து முன்னூத்துக் காதவழி

சில்லென்ன காடுஞ் செடியும் புனாந்திரமும்
அந்த வனங்கடந்து அப்பாலே போகையிலே
கனகமலை சுத்துவைத்துக் கரடிமலை கால்நீட்டி
அம்புதனைத் தீட்டிக்கொண்டு இருந்தானே ராவணனும்
காலையுங் கண்டார்கள் கனத்தபடை மன்னவர்கள்

துரோணா சாரிதானுந் துருசாக ஓடிவந்து
காலையும் வாங்குமடா கனத்ததொரு ராவானே
கால்வாங்கச் சொன்னதுக்குக் கண்டதுண்ட
மாக்கிடுவேன்

விஷ்ணுமா சாரி விருசாக ஓடிவந்து
பெண்கொள்ள வேணுமென்றால் பேசாமல் போகவேணும்

அந்தப் படிக்கி அவன் காலின்கீழ் நடந்தார்கள்
சங்குதுவார காபுரியில் தளமெல்லாம் வந்திறங்க
மாய னதுகண்டு மன்னரெல்லாம் வாருமென்றார்.
வந்த உறமுறைக்கி வகையாய் விடுதிவிட்டு
நம்முடைய கோட்டைக்கு நாலுதலை வாசலுண்டு

நாலுதலை வாசலுக்கு நலமாகக் காவல்வைத்துக்
கோட்டைசுத்திப் பாளையமுங் குறையாமல் போட்டுவைத்துக்
கலியாண காரியங்கள் கடுகியே கோப்பியுங்கள்
கலியாணச் சொண்டு நாளைக்குக் காணவே கூடாது
மாயன் பெருமாளும் மாயமாய்ப் போனதுவே

கெருடனென்று ஒருபிறவி கேசரி மார்க்கமதாய்
அந்த வனங்கடந்து அயிரா பதங்கடந்து
ஆனைகுந்திப் பட்டணத்தில் அடவாக வந்திறங்கிப்
பாப்பான் வடிவெடுத்துப் பஞ்சாங்கங் கைப்பிடித்து
மூணுமுழ வேஷ்ட்டி முப்பது பீத்தலது

நாலுமுழ வேஷ்ட்டி நாற்பது பீத்தலது
பழுத்தபழம் போலே பல்லுமே இல்லாமல்
வாளபிமன் றன்மனைக்கு வந்தானே பாப்பானும்
பாப்பானைக் கண்டு பசகமே ஓடிவந்து
எந்தவூர் ஐயா எங்கைவந்தாய் இப்போது

தூரம் வடக்கே துவரகாபுரிச் சீமையம்மா
சங்குதுவரகா புரியிலிருந்து எங்கள் தங்கச்சி சொல்லிவிட்டாள்
மாயன்மகன் சுந்தரிக்கு வருசைகலி யாணமென்று
நாளைகலி யாணமென்று நல்லோலை வந்துதம்மா
அதுகண்டு போனால் அஞ்சுபொன் தான்வருமே

வீண்பேச்சுப் பேசாதே வெளியிலே போடாநீ
போசனமும் வேணுமம்மா புத்தியுள்ள சுபத்திரியே
அப்போ(து) அரிசிபடி அடவாகத் தான்குடுத்து
வேஷ்டியிலே தான்முடிந்து வெளியிலே போடாநீ
தண்ணீர் தவிக்குது தாகந்தீர வேணுமென்றான்

நீர்மோர் குடுத்து நில்லாமல் போடாநீ
அந்தநல்ல வேளையிலே வாளபிமன் வந்தானாம்
பாப்பானைக் கண்டு வாளபிம னேதுசொல்வான்
எந்தவூர் ஐயா எங்கைவந்தாய் இப்போது
அடவாகச் சொல்லுகிறேன் ஆனதொரு வாளபிமா

கலியாண வாசலுக்குக் கடுகவே போறேனென்றான்.
லக்கண குமாரனுக்கும் நல்லதொரு சுந்தரிக்கும்
நாளைவெள் ளிக்கிழமை விசைய தசமியிலே
என்னோ டுடன்பிறந்தவள் உத்தாள் அனுப்பிவிச்சாள்
கலியாண வாசலிலெ னக்கு காணிக்கை
மெத்தவுண்டு

அதுகண்டு நான்போறேன் ஆனதொரு வாளபிமா
அப்போது பாப்பான் அடவாகப் போறமென்று
தன்னாடி எழுந்திருந்து தலைவாசல் முன்னாக
வாசல் படிதடுக்கி வகையாக வீழ்ந்தானாம்
சுபத்திரியாள் தேவிகண்டு தோசம்வந்து
சேருமென்று

வாடா மகனே வாளபிமா நீதானும்
அய்யன் பிறகே அடவாகப் போய்வாடா
அப்போது வாளபிமன் அய்யன் சுமையெடுத்து
நந்தவனத் துக்குள்ளே நலமாகக் கூட்டிவந்து
தம்பியடா வாளபிமா என்பேச்சுத் தட்டாதே

சொல்லுமய்யா என்றுதுரை அபிமன்னன் கேட்டானாம்
அப்போது அய்யன் அடவாகச் சொன்னதுவே

எனக்குயெளப்பு வசமல்ல இனிக்கேளும் என்வார்த்தை
தலையை எடுத்துப்போய்த் தண்ணீரு கொண்டாநீ
எங்களுட ராச்சியத்தில் எல்லாஞ் சருத்தாண்டா

அதுக்குநீ யோசினைகள் எண்ணாதே வாளபிமா
நல்லதென்று சொல்லி நடந்தானாம் வாளபிமன்
அரிசியும் போட்டு அசனமும் வெந்ததுவே
சாத மிறக்கிச் சாப்பிட வாருமென்றான்
அப்பவே வாளபிமன் அடவாகச் சொன்னதுவே

அய்யாநீ யிப்பவும் அசனமும் பண்ணுமென்றான்
உன்னைவிட்டு நானும் உண்பதில்லை சாதமென்றான்
வாளபிம னையழைத்து வகையாய் இலைபோட்டு
அய்யன் தனக்கிலையும் அடவாகத் தான்போட்டு
இருவரெண்டு பேரும் இலைக்கிநீர் தான்தெளித்துச்

சாதம் பரிமாறித் தயவாக உண்டார்கள்
போசனமும் பண்ணிப்பூந் தோட்டத்தில் இருக்கையிலே
அய்யனும் அப்போ அடவாகச் சொன்னதுவே
கலியாண காரியம் கடுக முடியுதிப்போ
நானுமே போகவேணும் நல்லதொரு வாளபிமா

அந்தச்சேதி வாளபிமன் அடவாகக் கேட்டபின்பு
அப்போது அய்யன் அடவாகச் சொன்னாராம்
என்பிறகே போகச் சொன்னாளே உன் தாயார்
அதுவே பயணமென்று அடவாக வாருமென்ன
நல்லதென்று சொல்லி நடந்தார் இருவருமே

அந்த வனங்கடந்து அப்பாலே போகையிலே
மூங்கி வனங்கடந்து முன்னூத்திக் காதவழி
இருவரெண்டு பேரும் இதமாகப் போகையிலே
மருமகன் சவுரியத்தை வகையாகக் காண்பமென்று
வாளபிமன் வல்லரக்க னைவெட் டினசண்டை

அப்போது பாப்பான் அடவாகத் தான்மறைந்தான்
அப்போது வாளபிமன் அடவாகத் தான்பாத்துப்
பொய்யை மிகச்சொல்லிப் போய்மறைந்தார் மாயவரும்
இப்பவே நான்கண்டால் இருதுண்டம் ஆக்கிடுவேன்
இத்தினை தூரம்வந்து இனிப்போறது ஞாயமல்ல

வாளபிமன் வாறான் வனத்தில் திசைநோக்கி
மாயனது கண்டு வகையாக முன்னைவந்து
வாளபிமன் முன்னாகப் பொன்னாறும் வந்ததுவே
வாளபிமன் வந்திறங்கி வகையாகத் தெண்டனிட்டு
மாரளவு தண்ணியிலே வாறாணாம் வாளபிமன்

நடக்க நடக்க நன்றாக வாயளவாய்
ஆகாச மாக ஆறுகொண்டு போகுதிப்போ
வாளபிமன் தானும் வாகாக நீஞ்சியதே
கையசந்து மெய்யசந்து காலசந்து போகையிலே
பாத்தாரே மாயவரும் பழிவந்து நேருதிப்போ

என்றுசொல்லி மாயன் எதிராக ஓடிவந்து
தெர்ப்பை புல்லாகத் திரணையாய் வந்துநின்று
நாலுதிக்கும் பாத்து நல்லதொரு வாளபிமன்
வாளை எடுத்து மகாமேரு நோக்கிவிட்டான்
வாளு வருகையிலே வலதுகையி லேபிடித்து

வெட்டினான் வாளபிமன் விருசாக ஆறுதனை
இறுபிறமும் ஆறு இருதுண்டமாய் விலகியதே
தண்ணிநின்ற இடமெல்லாம் தனிமேடு ஆனதுவே
ஆத்தைவிட்டு மேடேறி அப்பால் வருகையிலே
மாயன் பெருமாளும் வகையாக முன்னைவந்து

வல்லரக்கன் வனத்தில் வகையாய்முன் னோடிவந்து
கரடிபுலி சிங்கம் காணாமல் போனதுவே
வல்லரக்கன் கண்ணாலே காணாமல் போனதுவே
என்றுசொல்லி அப்போ இருந்தாரே மாயவரும்
வல்லரக்கன் வனத்திலே வந்தானே வாளபிமன்

வாளபிமன் அப்போது வகையாய் இளப்பாறி
வல்லரக்கன் படுக்கும் வட்ட நல்ல பாறைதனில்
பாறையின் மேலே படுத்தானாம் வாளபிமன்
மலைகள் செடிகளெல்லாம் வகையாகச் சுத்திவந்து
வயத்துக்கிரை சிக்காமல் வாறானாம் வல்லரக்கன்

நீலமுழிக் கண்கள்ரெண்டும் நெருப்புத் தனலாக
தின்னுமிந்தத் தம்பலங்கள் தீக்கலந்து வேகுதப்போ
பாறைதனைநோக்கி வாறானாம் வல்லரக்கன்
என்னவென்று சொப்பனங்கள் காணுகுறான் வாளபிமன்
திரியோ தனன்படையைச் சேரவே தான்துரத்தி

மாயன்மகள் சுந்தரியை மாலையிடப் போனாப்போல்
அம்பிவல மாக அரசாணி முன்னாகச்
சாலுங் கரகமுந் சத்திரரு முன்னாகச்
சுத்திவந்து வாளபிமன் சுண்டுவிரல் பிடிக்கையிலே
அந்தநல்ல வேளையிலே ஆனதொரு வல்லரக்கன்

பாறைதனில் வந்துகண்டான் பாங்கானபாலனைத்தான்
ஆரடா பயலே அசந்துமிகத் தூங்குறவன்
எழுப்பிவிட வல்லரக்கன் எதுராக வந்துநின்று
வல்லரக்க னைக்கண்டு வகையாக நிற்கையிலே
எந்தஊ ரடாபயலே எனக்குஇரை ஆச்சுதடா

இன்று பிழைத்தேன் ஈடேரிப் போனேன்நான்
வல்லரக்கன் வனத்திலே வந்தேனே இப்போது
என்னைநீ திங்க எத்தினைபாக்கியம் பெத்தேனோ
நான், தூங்கி எழுந்திருந்து தோசமுண்டு கண்டீரே
இஸ்த்தானம் பண்ணித்தின்றால் தர்மமுண்டு
உந்தனுக்கு

பூசைபண்ணித் தின்றால் புண்ணியமு மெத்தவுண்டு
ஆத்திலே ஸ்த்தானம்பண்ணி அரைநொடியில் நான்வாறேன்
அப்போ மனமிரங்கி ஆனதொரு வல்லரக்கன்
போமென்று சொன்னான் பொல்லாத வல்லரக்கன்
தண்ணியிலேபோய் ஸ்த்தானம்பண்ணி வாளபிமன்

பத்திரகாளி கோவிலுக்குப் பளீரென்று ஓடிவந்து
அம்மனைக் கண்டு அடிவணங்கித் தெண்டனிட்டுச்
சாஷ்டாங்கஞ் செய்துசிவ சங்கரியே மாதாவே
என்று தொழுது இருக்குமந்த வேளையிலே
ஏண்டா மகனே சாங்கைவந்தாய் இப்போது

அப்போது வாளபிமன் அடவாகச் சொன்னதுவே
மாயன்மகள் சுந்தரிக்கி மாலையிட நான்போறேன்
வல்லரக்கன் வனத்தில் வந்துநான் சிக்கிவிட்டேன்
வல்லரக்கன் கண்டு வகையாகக் கைப்பிடித்து
எனக்குப் பசிக்குதுஉன்னை விடுகிறது இல்லையென்றான்

தப்பிப் பிழைச்சுவந்தேன் தாயே வரந்தாடி
வல்லரக்க னைக்கொல்ல வால்கொடுக்க வேணுமம்மா
அப்போது பத்திரகாளி ஆயுதமுங் கைக்கொடுத்து
வல்லரக்கன் தன்னுயிரை வகையாகக் கொல்லுமென்றான்
வாழ்த்தி விடைகொடுத்து மந்திரவாள் கைக்கொடுத்தாள்

ஆத்தாளே தாயேஎனக்கு ஆனதுணை நீயல்லலவோ
மாதாவே எனக்குஆபத்து வாராமல் காக்கவேணும்
போறோமென்று தானும் புகழபிமன் தெண்டனிட்டு
ஆயுதமும் வாங்கி அடவாகத் தான்நடந்தான்
அந்த வனங்கடந்து ஆத்தாங் கரையில்வந்தான்

பயலையும் காணாமல் பாத்தானே ராச்சதனும்
காணாமல் தேடிக் கரையோரம் வருகையிலே
கண்டான் பயலைக் கடுங்கோப முண்டாகியதே
வாளைச் சொருகி வாள்மேலே பூசைபண்ணயிலே
வல்லரக்கன் பாத்து வண்டப் பயலேநீ

இந்நேரம் போனதுக்கு உனக்கேத்தபுத்தி
சொல்லுவண்டா
வண்டப் பயலேநீ வாடாநீ கிட்டனவே
என்னை மறிச்சதுக்கு இரணகளம் பண்ணுவண்டா
திங்குறேன் என்றதுக்கு உன் சீவனை வாங்கிடுவேன்
அதட்டி எழுந்திருந்தான் ஆனதொரு
வல்லரக்கன்

அப்போது வல்லரக்கன் அடவாகத் தான்பார்த்து
மோசமே வந்துதுமுழுமோசம் வந்துதென்று
பயலென்று நானிருந்தேன் பழிகாரன் ஆனதுவே
கடக்கப்போய்த் தானும் கல்லை உருட்டிவிட்டான்
போத மலைபிடுங்கிப் போட்டானே வல்லரக்கன்

வாளை எடுத்துவட பத்திரகாளியைத் தான்நினைந்து
போதமலை யத்தினையும் பொடிப்பொடியாய்ப்
போனதுவே
கொல்லி மலைபிடுங்கிக் கோவித்துப் போட்டானாம்
எதுப்பட்ட மலைகளெல்லாம் இலவம்பஞ் சானதுவே
அவன், கண்பட்ட மலைகளெல்லாம் கடுகுபொடி
யானதுவே

வல்லரக்கன் பாத்து மாளவே நாளாச்சு
மலையிலே உள்ள மரங்களெல்லாந் தான்பிடுங்கிச்
சேத்தி யடிச்சானாம் தேக்கமரம் அத்தினையும்
வாற மரமெல்லாம் வாளாலே தட்டிவிட்டான்
வாளபிமன் அப்போ வாளெடுத்துக் கச்சைக்கட்டி
அய்வர் தனைநினைந்து ஆயுதமுங் கைபிடித்துப்

பத்திரகாளி அம்மனையும் பங்காகத் தான் நினைந்து
வாளை உருவி வல்லரக்கன் மேல்போட்டான்
வல்லரக்கன் தன்தலையும் மலைபோல விழுந்ததுவே
பட்டானே வல்லரக்கன் கேட்டாள் கமலக்கன்னி

கமலக்கன்னிக் கபையமென்று கானகத்திலேவிழுந்து
அபையமென்ற சத்தம் கமலக்கன்னி கேட்டதுவே
கமலக்கன்னி அப்போ கடோற்கயனே வாடா நீ
கடோற்கயனும் வந்து கண்டானே தாயாரை
அப்பா மகனேஒரு அதிசெயம் கண்டனப்பா

கமலக்கன்னி யென்றசத்தம் என்காதில் விழுந்துதுவே
வனம்போன பஞ்சவர்க்கு வஞ்சினைகள் வந்ததுண்டோ
வனத்தில் குடியிருக்கும் வல்லரக்கன் மாமனுக்கோ
ஆரென்று சொல்லி அறிவறிந்து வாடா நீ
கட்டுச் சோறுகட்டிக் கடுகவே தாருமென்றான்

சாதமுங் கட்டித் தப்பாமல் தான்கொடுத்தாள்
கொல்லிமலை போலே கொடுத்தாளே அப்பேது
கட்டுச் சாதமுங்குடுத்துக் கடுகவே போகவென்றார்
வாளெடுத்துக் கச்சைகட்டி வாணாத் தடியெடுத்து
அந்த வனங்கடந்து அப்பாலே போகையிலே

வல்லரக்கன் வனத்தில் வந்தே கடோற்கயனும்
வல்லரக்க னைக்கண்டு வாய்விட்டுத் தான்புலம்பி
அழுது புலம்பி ஆர்க்கரித்துப் பல்கடித்து
அம்மானை வெட்ட ஆம்பிளையு முண்டோதான்
மாமனை வெட்ட வலுக்காரன் உண்டோதான்

எங்களுக்குப் பிலவான் ராச்சியத்தில் இல்லையேதான்
நீலவிழிக் கண்கள்ரெண்டும் நெருப்புத் தனலதுபோல
தின்னுமிந்தத் தம்பலங்கள் தீக்கடந்து வேகுதிப்போ
தாரை எடுத்துத் திசைநோக்கி வாறானாம்
வாற நடத்திலே வாளபிமன் தானிருந்தான்

அண்ணாந்து பாத்தான் ஆன கடோற்கயனும்
நாவமர மேலிருக்கும் நல்ல சிறுபயலே
எங்கள், மாமனை வெட்டினவன் வந்தானோ இப்படியே
அப்போது தான்பயலும் அடவாகச் சொன்னானாம்
திக்குவிசை யப்பாலே தெக்கேதான்
பேறேண்டா

அதுயின் பிறகே அனேகந்தூரம் தான்கடந்தான்
காணாமல் தானும் கடோற்கயனும் ஓடிவந்து
பொய்யைமிகச் சொன்னாயே புத்திகெட்ட தன்பயலே
நீ, தெற்கேதான் போகையிலே வடக்கேதான்
போறாண்டா
வடக்கே திசைநோக்கி வகையாகச் சுத்திவந்து

வடக்கேதான் போகையிலே மேற்கேதான் போறாண்டா
மேற்கே திசைநோக்கி விழுந்தோடி வருகையிலே
கண்ணிலையும் காணகமல் கடோற்கயனும் வாறானாம்
அப்போது வாளபிமன் அடவாகத் தான்பாத்துக்
கிழக்கையும் போறாண்டா கிட்டவேநான்
கண்டேண்டா

கிழக்கையும் பாத்துக் கிட்டவே ஓடிவந்து
தொண்டப் பயலேநீ சொன்னதெல்லாம்
பொய்தாண்டா
பயலென்று சொன்னதுக்குப் பல்லைப் பிடுங்குவண்டா
உன், மாமனைக் கொன்ற மதயானை நான்தாண்டா
பயலென்று நானிருந்தேன் பழிகாரனானையடா

கடோற்கயன் தானும் கண்கள் பொறிபறக்க
நீல விழிகள் ரெண்டும் நெருப்புத் தணலதுபோல்
நல்லமரத் தைப்பார்த்து நன்றாய்க் கடோற்கயனும்
போட்டானே அப்போ பொடியாய்ப் பறந்திடவே
மரமும் அடியோடே வகையாய் விழுந்ததுவே

இருவரெண்டு பேரும் எதுத்தார்கள் அப்போது
பாணங்கள் போட்டார்கள் மலைகள் கிடுகிடெனக்
கல்லுகள் தனெடுத்துக் கடோற்கயனும் போட்டானாம்
வாளால் அபிமன்னன் வாளெடுத்துத் தான்போட்டான்
எதுப்பட்ட மலைகளெல்லாம் இலவம்பஞ்
சானதுவே

கால்பட்ட மலைகளெல்லாம் கடுகுபொடி
யாய்ச்சுதுகாண்
மலைகள் செடிகளெல்லாம் மாயமாய்ப் போனதுவே
இருவரெண்டு பேரும் இரணகளம் ஆகுதப்போ
இவன் போடுகுற பாணம் அவன்காலில்
பொஷ்பமாய் விழுந்ததுவே
விழுகுறது கண்டு மெத்த மனமுருகிச்

சக்கரமும் ஓடிவந்து தானே பணிந்ததுவாம்
எமதண்டா யுதத்தை இரணகளம் ஆக்கிவிட்டான்
எமதண்டா யுதமும் இடப்பிரி வலம்பிரியாய்ச்
சுத்திவந்து தெண்டனிட்டுத் துருசாக வந்ததுவே
அந்தரத்துத் தேவரெல்லாம் அதிசெயமாய்ப்
பாத்துநிற்கச்

சுத்திவந்து தெண்டனிட்டுத் துருசாக வந்திடுமாம்
வீமனுட போரோ விசையனுட தன்போரோ
ராமபத்திர சுவாமியுட நல்லதொரு தன்போரோ
ஆருடைய போரோ அளவரும்போம் பூமியிலே
மாயனுட போரோ மகாதேவன் தன்போரோ

தேவர்கள் பாத்திருக்கத் திறமாய்ப் பொருதார்கள்
மண்டிப் பொருதார்கள் வாளோடு வாளுரையத்
தண்டிப் பொருதார்கள் சனங்களெலாம் மெச்சிடவே
சட்டிப் பிரண்டு கடோற்கயனும் தான்விழுந்தான்
கடோற்கயன் எழுந்திருந்து கடக்கவே
போயிருந்து 1125

வாடாநீ தம்பிஉங்கள் வங்கிஷத்தைச் சொல்லுமடா
மலையிலையும் உண்டோடா மக்களுட தன்னுறவு
சண்டையிலே உண்டோடா தன்னுறவு செப்பியது
பின்னுக்குப் போடா பிரட்டுவண்டா உன்னுயிரை
வேண்டாப்டா தம்பிவெகு வீரியத்தைச்
சொல்லாதே 1130

நீதானும் சொல்லாட்டி நான்தானும் சொல்லுகுறேன்
என்னோடே சொல்லாதே இந்தமலையோடே
சொல்லுமடா
மலையை மிகப்பாத்து வங்கிஷத்தைச் சொன்னானாம்
மலையே மலையேயென் வங்கிஷத்தைக் கேளுமினி
ஆரியகுல வங்கிஷமாம் சூரியகுல வங்கிஷமாம் 1135

பரிவான சந்திரகுலம் பாண்டுபுத்திரன் கூட்டபடா
வெத்தி மதயானை வீமனுட புத்திரண்டா
அந்தமொழி கேட்டு அடவாக ஓடிவந்து
கடோற்கயனை வந்து கட்டினான் கையாலே
கட்டி அழுதார்கள் கண்கள் சிலையோட 1140

ஒக்கப் பிறக்கஒரு கோடிநாள் சென்றிடுமே
கூடப் பிறக்கக் கோடிநாள் சென்றிடுமே
தேடக் கிடையாதே தேடியநாள் கிட்டாதே
வருந்தக் கிடையாதே வருந்தியநாள் கிட்டாதே
தம்பியடா வாளபிமா தனிச்சுவழி வந்ததென்ன 1145

தம்பியடா வாளபிமன் தன்னுடைய கண்துடைத்து
அண்ணனைப் பார்த்து அடிதொழுது தெண்டனிட்டு
வாளா லபிமன் வகையுடனே சொல்லுகுறான்
திரியோ தனன்பாவி திக்கத்த பொட்டிமகன்
மாயல்மகள் சுந்தரியை மாலையிடப் போறமென்று

பதினெக் குரோணி படைமன்னர் போறாராம்
அதுகண்டு நானும் அடவாக ஓடிவந்தேன்
வல்லரக்கன் வாழும் வனம்புகுந்தேன் அண்ணாவி
என்னைக், கண்டு மறிச்சுக் கண்கள் பொறிபறக்கத்
தியங்குறதே யல்லாமல் திரும்பிவிடப் போறதில்லை

என்றுசொல்லி வல்லரக்கன் இப்படியே சொன்னதற்பின்
ஆயுதத்தைத் தானெடுத்து அவ்வரையுந் தான்நினைந்து
வெட்டினேன் அண்ணாவி விழுந்தானே வல்லரக்கன்
அந்தமொழி கேட்டு ஆன கடோற்கயனும்
தம்பியரே வளபிமா தாடாளா கேளுமிப்போ

அம்மானுஞ் செத்தால் அதுவொன்றுஞ் சேதமில்லை
இருவரொன்று பேருக்கும் இனிப்பீடை போச்சுதையா
அதுகொண்டு சேதமில்லை அன்பான தம்பியரே
வாடாநீ தம்பியென்று வல்லரக்கன் கிட்டவந்து
வெட்டின முண்டத்தை விதமாகக் கூட்டிவைத்துக்

கடோற்கயன் கொண்டுவந்த கட்டுச் சோத்தினையும்
வாய்க்கரிசி யென்று வைத்தார்கள் அப்போது
கொள்ளியும் வைத்துக் குடமும் உடைத்தார்கள்
கட்டையும் போட்டுக் கானகத்தில் வெந்ததுவே
நல்லடக்கம் பண்ணி நடந்தார் இருவருமாய்

அந்த வனங்கடந்து அப்பாலே போகையிலே
ஆரண்ய வனங்கடந்து அயிரா பதங்கடந்து
பொன்னாறு தான்கடந்து பூந்தோட்டம் உள்புகுந்து
பூந்தோட்டத் துக்குள்ளே புகழபிமன் தன்னைவைத்துக்
கமலக்கன்னி அரமனைக்கிக் கடோற்கயனும்
வாறானே

ஆத்தாளைக் கண்டு அடிவணங்கித் தெண்டனிட்டு
வாடா மகனையென்று வளையாகத் தானெடுத்து
போனதொரு காரியத்தைப் புத்திரனே
சொல்லுமென்றாள்
அம்மானே அல்லாமல் அய்வருக்குச் சேதமில்லை
வல்லரக்கன் வாயினால் மாண்டானே இப்போது

அம்மானை வெட்டுகுற ஆம்பிளையும் உண்டோதான்
என் அண்ணனை வெட்டுகுற மதயானை
யுண்டோதான்
அதட்டி எழுந்திரிந்து ஆர்க்கரித்துப் பல்கடித்துக்
கோபித் தெழுந்திரிந்தாள் கொடுஞ்சூரி கமலக்கன்னி
நீலவிழிக் கண்கள்ரெண்டும் நெருப்புத் தணலாக

அண்ணனைக் கொண்ண அவனுயிரை விடுவதில்லை
என்றுசொல்லித் தானே இருக்கின்ற வேளையிலே
மாதாவே தாயே மனஞ்சலிக்க வேண்டாமே
கோபத்தை யுள்ளடக்கும் கொண்ணவனும்
நான்தாண்டி
அடிச்சவரை அடியாதே ஆனதொரு தாயாரே

அய்வர்வன வாசம் அடவாகப் போனபின்பு
திரியோ தனனும் தென்னவர்கள் உள்ளதெல்லாம்
மாயன் மகள் சுந்தரியை மாலையிடப் போறார்கள்
அந்தநல்ல சேதிதம்பி அபிமன்னன் தான்கேட்டு
வல்லரக்கன் வனத்தில் வந்தானாம் வாளபிமன்

அந்தநல்ல வேளையிலே அவனை வழிமறித்துத்
திங்குறந்த அல்லாமல் திருப்பி விடுவதில்லை
என்றுதான் சொன்னானாம் ஏற்றமுள்ள வல்லரக்கன்
பரிவான சந்திரகுலம் பாண்டுபுத்திரன் கூட்டமடா
அருச்சுனன் புத்திரண்டா ஆனதொரு
வல்லரக்கன்

கடந்தப்பி வந்துவிட்டேன் தர்மதுரை விட்டுவிடும்
என்னையும் பாராட்டி எங்கள ய்வரையும்
பாருமென்றான்
அய்வரையும் பாத்தால் ஆனபசி தீருமோதான்
என்றுதான் சொல்லி ஈதங்கெட்ட வல்லரக்கன்
வாளபிமன் மேலே மரத்தைப் பிடிங்கிவிட்டான்

அப்போது வாளபிமன் அதட்டி எழுந்திரிந்து
எண்ணாது எண்ணி எதுத்தானாம் வாளபிமன்
அப்போது வல்லரக்கன் அடிச்சான் மரம்பிடிங்கி
வந்த மரமெல்லாம் வாளபிமன் தட்டிவிட்டான்
வாளபிமன் கொக்கரித்து வாளாலே தட்டிவிட்டான்

வீச்சு மிகப்பட்டு விழுந்தானே வல்லரக்கன்
தம்பிதப்பி வந்தது தர்மமடி என்தாயே
அப்பா மகனை அழகுமைத்திரு மேனியனை
பூந்தோட்டந் தனில்வைத்துப் புறப்பட்டேன் என்தாயே
அப்போது கமலக்கன்னி அலறியே ஓடிவந்து

பூந்தோட்டம் வந்து புத்திரனைத் தானெடுத்து
வாரி யெடுத்து வர்ண முகந்துடைத்துச்
சேத்தி யெடுத்துத் திருமார்பில் முத்தமிட்டு
உச்சி முகந்து உள்ளங்கால் முத்தமிட்டுத்
தேடக்கிடையாது மகனே தேடியநாள் கிட்டாதே

வருந்தக் கிடையாது வருந்தியநாள் கிட்டாதே
நல்லநாள் கேட்டு நாளு முகிர்த்தமிட்டுக்
கடோற்கயனைத் தானழைத்துக் கமலக்கன்னி
யேதுசொல்வாள்
அப்பா மகனே அறிவுள்ள அபிமன்னா
மாயன்மகள் சுந்தரியை மாலையிட்டு வாடாநீ 1225

பாலுக் குடிச்சதுண்டு படைமுகமுங் கண்டதில்லை
தயிரு குடிச்சதுண்டு தனிச்சபடை கண்டதில்லை
மோரு குடிச்சதுண்டு மூண்டபடை கண்டதில்லை
இப்படி முகமறியான் எதுத்தபடை வெல்லறியான்
சந்திரனைக் கண்டதுண்டு சண்டைமுகங்
கண்டதில்லை 1230

சூரியனைக் கண்டதுண்டு சூழ்ந்தபடை கண்டதில்லை
திரியோ தனன்படையைச் சேரவே தான்தூரத்திக்
கலியாண சோபனத்தைக் கட்டா முடியுமடா
போற்றி விடைகொடுத்துப் போய்வா மகனையென்றாள்
மக்களிரு பேரும் வகையாகத் தெண்டனிட்டுத் 1235

தெண்டனிட்ட புத்திரனைச் சீமானய்யா போய்வாடா
வடபத்திர காளியம்மாள் வருவாள் துணையாக!
போமென்று சொல்லிப் புத்திரரைத் தானனுப்பி
ஊரைவிட்டுக் காதவழி ஒருநொடியில் வந்தார்கள்
அந்த வனங்கடந்து அப்பறமே போனார்கள் 1240

மாயனது கண்டு வகையாக முன்னைவந்து
பாப்பான் வடிவெடுத்துப் பஞ்சாங்கங் கைப்பிடித்து
ஒருமலையில் சுத்தவைத்து ஒருமலையில் காலுதைத்து
அஞ்சம்பு தானெடுத்து அகலம்பு தீட்டுகுறான்
அந்தநல்ல வேளையிலே அய்யனும் கிட்டவந்து 1245

காலையும் வாங்குமடா கண்ணாளா தம்பியரே
கால்வாங்கச் சொன்னதுக்குக் கண்டதுண்டம் பண்ணுவண்டா
மாயனது கண்டு வண்டத்தனம் ஆச்சுதென்று
தம்பியடா ராவானே சண்டைக்கோ தீட்டுகிறாய்
நீ தீட்டுகிற அம்பு செயிக்குமோ செயிக்காதோ

சோதினை பார்க்கவேணும் துருசாகப் போடுமென்றார்
அப்பவே ராவானும் அடவாகக் கால்வாங்கி
என்னதான் போட எனக்கறியச் சொல்லுமென்றான்
ஆலமரத் திலையையொரு அம்பாலே எய்யுமென்றார்
அப்பவே ராவானும் ஆண்டவனைத் தான்நினைந்து

சறவனை அம்பைத்தான் தயவாக உச்சரித்து
இலைக்கிலொரு அம்பு இயல்பாகப் போனதுவே
மாயனது கண்டு வகையாகச் சொன்னதுவே
ஏதடா தம்பிஒரு எலையை விட்டதுதான்
அய்யனே இப்போது கேட்டாயோ இல்லையென்றான்

எங்களுட மாமன் ஆலிலைமேல் பள்ளிகொண்டார்
அதுகண்டு ஒருஇலையை அடவாக விட்டுவிட்டேன்
என்றுமிகச் சொன்னான் ஏற்றமுள்ள ராவானும்
வாளபீமன் கடோற்கயனும் வந்தான்வனந்தனிலே
ஊசி வனங்கடந்து உத்திராட்சப் பூமிவிட்டுச்

சின்னென்ன காடுஞ் செடியும் புனாந்திரமும்
நாகமலை தோகமலை நடுவேஒரு கரடிமலை
கண்ணாடிமலை மேலிருந்து கரடிமலை சுத்துவைத்துப்
பதினெட்டு நாளைப் படைப்போர் வருகுதென்று
அஞ்சம்பு தானெடுத்து அகலம்பு தீட்டுகிறேன்

அந்த வழியே கடோற்கயனும் தர்பியரும்
இருவரெண்டு பேரும் இதமாக வந்தார்கள்
ஆரடா மலைமேலே அர்புகனைத் தீட்டுறவன்
காலையும் வாங்குமென்று கடோற்கயனும்
சொன்னானாம்
திரியோ தனன்சேனை தென்னவர்கள்
உள்ளதெல்லாம்

மூணுநாள் தானும் மூர்க்கமுள்ள சேவுகரும்
என் காலின்கீழ் போனார்கள் கனத்தபடை மன்னவரும்
கால்வாங்கச் சொன்னதுக்குக் கண்டதுண்டம்
ஆக்குவண்டா
பேசாமல் போடா பேய்கொண்ட பேய்ப்பயலே
பயலென்று சொன்னதுக்குஒரு பல்லைப்
பிடுங்குவண்டா

அதட்டி எழுந்திரிந்தான் ஆன கடோற்கயனும்
கரடி மலையைக் காலாலே தானுதைத்தான்
மலையிடிந்து விழுந்தது மகாமேரு போலையப்போ
கண்டேதான் ராவணனுங் கடுகவே தான்குதித்தான்
அலைக்கொட்டி எதுத்தானாம் அயிரா
பதமறிந்து

அஞ்சு மலையெடுத்து அடவாகத் தான்போட்டான்
எதுப்பட்ட மலைகளெல்லாம் இலவம்பஞ் சானதுவே
கால்பட்ட மலைகளெல்லாம் கடுதபொடி யாகுதுகாண்
அப்போது ராவணன் அம்பு தனையெடுத்து
அக்கினி பாணம் அடவாய்த் தொடுத்துவிட்டான்

மானத்துக்கும் பூமிக்கும் உருகுதே பாணமது
கண்டான் கடோற்கயனும் கனமோசம் வந்துதென்று
வாதுராசா வைநினைந்து வகையாக உச்சரித்தான்
அப்பவே அம்பு அடவாக வந்ததுவே
அக்கினி அம்பு அடவாக வந்ததுவே

மழையம்பு தான்போய் வகையாகச் சுத்திவந்து
அக்கினி அம்பை அவிச்சுதுகாண் அம்மானை
பாணம் எழும்பிச்சு மகாமேகந் தான்போலே
இருவரெண்டு பேரும் இரணகளம் ஆனதுவே
நாகபாணந்தொடுத்தான் நலமுடைய ராவானும்

கெருடனைக் கண்டு கீழ்விழுந்து போனதுவே
அப்போது ராவானும் அடவாகத் தான்பாத்துச்
சரவணை அம்பைத் தானேதான் உச்சரித்துப்
போட்டானே அம்பு ராமபாணம் பூமியெல்லாந் தான்நடுங்க
மண்ணதிர விண்ணதிர மாத்தான் முடியதிரப்

பாணம் வருகுறது மலைகள்பத்தி வேகுதிப்போ
கடோற்கயன் அப்போ கண்ணாரக் கண்டானாம்
அய்வரையும் தான்நினைந்து அயிரா பதமெடுத்து
எதிராகப் போட்டானாம் வாளு ரெண்டுதுண்டம் ஆனதுவே
இவன் போடுதுற அம்பு அவன்காலில் விழுந்ததுவே

அவன் போடுகுற பாணம் இவன்காலில் விழுந்ததுவே
வாறதொரு பாணமெல்லாம் மலராய் விழுந்ததுவே
அந்திரத்துத் தேவரெல்லாம் அதிசெயமாய்ப் பார்த்துநிற்க
இந்த உலகில் இயல்போடு கண்டதில்லை
வாலியுட போரோ மாயனுட தன்போரோ

வீமனுடபோரோ விசையனுட தன்போரோ
இதுஆரு போரென்று அடவாகப் பாத்தார்கள்
தேவர்கள் பாத்திருக்கத் திரமாய்ப் பொருதார்கள்
அப்போது ராவான் அடவாகக் கிட்டவந்து
ஆரடா தம்பிஉங்கள் வங்கிஷத்தைச் சொல்லுமடா

சொல்லாதே போனாக்கால் என்சிலனை
மாய்த்திடுவேன்
மலையிலே உண்டோடா மக்களுட தன்உறவு
சண்டையிலே உண்டோடா ஒப்பாரி பிடிக்குறது
ஏண்டாநீ இப்போ இழப்புப் பறையாதே
அப்போது ராவான் அடவாகச் சொன்னதுவே

நீ சொல்லாதே போனாலும் நான்தானும்
சொல்லுகுறேன்
என்னோடே சொல்லாதே இந்த மலையோடே
சொல்லுமடா
அப்போது ராவானும் அடவாகச் சொன்னதுவே
மலையேநீ கேளும் வங்கிஷத்தைச் சொல்லுகிறேன்
ஆரியகுல வங்கிஷமாம் சூரியகுல வங்கிஷமாம்

பரிவான சந்திரகுலம் பாண்டுபுத்திரன் கூட்டமடா
தாரார் புகழுடையான் தர்மருக்கு நேரிளையான்
ஊரார் புகழுடைய உற்றபுகழ் அருச்சுனனாம்
அருச்சுனன் குமாரன் ஆனதொரு ராவாண்டா
அப்போ கடோற்கயனும் அடவாக ஓடிவந்து

கட்டி அழுதார்கள் கண்கள் சிலையோடக்
கடோற்கயனும் ராவானும் கண்ணான வாளபிமனுமாய்
மூவரும் கூடி அழுதார்கள் கானகத்தில்
கூடப் பிறக்கத்தம்பி கோடிநாள் சென்றிடுமே
சேரப்பிறக்கத் தம்பியரே சேனைநாள் சென்றிடுமே

தேடக் கிடையாதுதம்பி தேடியநாள் கிட்டாது
வருந்தக் கிடையாதுதம்பி வருந்தியநாள் கிட்டாது
அழுது புலம்பி அய்வர்பெற்ற புத்திரரும்
தம்பியரே கண்துடைத்துத் தாடாளா எங்கைவந்தாய்
அப்போ கடோற்கயனும் அடவாகச்
சொன்னதுவே

மாயன்மகன் சுந்தரியைத் தம்பியர்க்கு மாலையிட
வந்தோமே
அந்தமொழி கேட்டு ஆனதொரு ராவணனும்
திரியோ தனன்படையும் தென்னவர்கள்
உள்ளதெல்லாம்
என், காலின்கீழே போனார்கள் கனத்தபடை
மன்னரெல்லாம்
சேதியறிந் தால் அவர்கள் சீவனை வாங்கிடுவேன்

ஆகட்டும் தம்பியரே இனியாரு தப்பப் போறார்கள்
என்றுசொல்லித் தானும் ஏற்றமுள்ள ராவணனும்
நாகக்கன்னி அரமனைக்கி நடந்தார்கள் மூவருமாய்
அந்த வனங்கடந்து அயிரம் பதங்கடந்து
மூங்கி வனங்கடந்து முந்நூற்றிக் காதவழி

நாகக்கன்னி அரமனைக்கு நன்றாய் நடந்தார்கள்
அப்போது நாகக்கன்னி அடவாய்க் கொலுவிருந்தாள்
மூவரும் வந்து மலர்தூவித் தெண்டனிட்டுத்
தெண்டனிட்ட புத்திரரைத் திக்கென்று தானெடுத்து
அப்பாமகனே இவர்கள் ஆரென்று கேட்டாளாம்

என்தாயே நாகக்கன்னி ஏற்றமுள்ள தாயாரைக்
கடோற்கயன் வான்வீமன் உனக்குத்தான் புத்திரண்டி
அலறி எழுந்திருந்து ஆனதொரு நாகக்கன்னி
வாரி யெடுத்து வரிசையுள்ள புத்திரரைத்
தேத்தி யெடுத்துத் தென்னவர்கள் மெய்த்திடவே

கட்டிக் கரும்பைக் கண்ணார முத்தமிட்டு
என்கவலை தீர்க்கவந்த எனக்கேந்த புத்திரரைத்
தம்பியரே நீங்கள் தனிச்சுவழி வந்ததென்ன
அந்தமொழி கேட்டு ஆனதொரு ராவணனும்
மாயன்மகள் சுந்தரியை மாலையிட வந்தார்கள்

நல்லதென்று சொல்லி நாகக்கன்னி அப்போது
சம்பங்கி எண்ணெய்கொண்டு தலைகோதிச்
சினுக்கெடுத்து
போசனமும் பண்ணிப் புழுகுசவ் வாதணிந்து
நல்லநாள் கேட்டு நலுங்கிட்டாள் மாப்பிள்ளைக்குக்
கங்கணமுங் கட்டிக் கடுகவே பயணம்பண்ணி

ராவாணைத் தானழைத்து நல்லதொரு நாகக்கன்னி
தம்பி இருவரும் தனிச்சுவழி போனதில்லை
இப்படி முகமறியான் எதுத்தபடை வெல்லறியான்
கைதி பிடிச்சதுண்டு கனத்தபடை கண்டதில்லை
சங்குதுவா ரகாபுரிக்கித் தாடாளா நீபோய்த்தான்

கலியாண வாசலுக்குக் கருத்தாகப் போயிருந்து
ஆராரு வந்தாலும் அஞ்சாதே என்மகனே
சேனைபடை வந்தாலும் சேரவே தான்துரத்திக்
கலியாண காரியத்தைக் கைநழுவப் பாராதே
வாழ்த்தி விடைகொடுத்து மந்திரவாள்
கைக்கொடுத்துப்

போற்றி விடைகொடுத்துப் போய்வா
மகனையென்றாள்
பக்கத் துணையாகப் பத்திரகாளி தான்வருவாள்
கூடத் துணையுமுண்டு குளுந்தவே லாயுதரும்
அய்வர் துணையுமுண்டு அஞ்சாதே போடா நீ
என்று தான் சொன்னாள் ஏற்றமுள்ள நாகக்கன்னி

அந்த மொழிகேட்டு ஆனதொரு ராவாணும்
கடோற்கயன் வாள்வீமன் ஆனதொரு ராவாணும்
மூவரும் எழுந்திரிந்து மூணுதரஞ் சுத்திவந்து
காணுகுறோம் தாயே கனகமுடி பொற்பாதம்
தெண்டனிட்ட புத்திரரைத் திக்கென்று
தானெடுத்து

இன்னர்பதம்பெறுவீர் ஈசர்பதம் உண்டாவீர்
தாலியும் கூறையும் தப்பாதே தான்கொடுத்து
வரிசை யுடமை வகையாகத் தான்குடுத்துத்
தம்பி கலியாணம் சடுதியில் முடியுமிப்போ
நாகக்கன்னி மகனை நன்றாய்ப் பயணம்பண்ணிப்

போடா மகனையென்று போற்றி விடைகொடுத்தாள்
மற்று மொருகால் மாதாவைத் தெண்டனிட்டுத்
தெண்டனிட்ட புத்திரரைத் திக்கென்று தானெடுத்து
அப்பா மகனே அறிவுள்ள புத்திரனே
தம்பியரும் நீயும் தாடாளா போய்த்திரும்பு

விடைவாங்கிக் கொண்டு வெளிப்பட்டுப் போனார்கள்
ஊரு கடந்து உத்திராட்சப் பூமிவிட்டு
நாடு கடந்து நாகமலை தான்கடந்து
மூங்கி வனங்கடந்து முந்நூற்றிக் காதவழி
நாகமலை தோகமலை நடுவேயொரு
செம்பொன்மலை

நாலுமலைக் குள்ளே நடுச்சந்து தடமுங்கண்டு
சாஸ்திரக் கொடிவேந்தன் சகாதேவன் புத்திரனும்
தொந்திசெட்டி தானும் வெள்ளிக் கோல்தனிலே
திறுத்து விடுகுறவன் நேசமுள்ள தொந்திசெட்டி
தொந்திசெட்டி சண்டை:
மூவரும் போயி முன்னாக நின்றார்கள்

சகாதேவன் புத்திரனும் தப்பாமல் தான்பார்த்து
எங்கையடா போறாய் எனக்கறியச் சொல்லுமடா
தூரம் வடதேசம் துலைதூரம் போறமடா
தடத்தையும் விட்டுத் தாடாளா நீவிலகாய்
ஏதடா நீயும் எண்ணாமல் சொன்னதுதான்

திரியோ தனஞ்படையும் தென்னவர்கள் உள்ளதெல்லாம்
நிறுத்தப் பலம்காட்டி நேராக விட்டேன் நான்
அவனிலும் நீங்கள் ஆண்மையுள்ள சேவுகரோ
நிறுத்திவிடு வேனென்று சொன்னானாம் தொந்திசெட்டி
அப்போது ராவணன் அபிமன்னன் கடோற்கயனும்

நிறுத்து விடுவனென்று சொன்னியடா நீபயலே
பயலென்று சொன்னதுக்குப் பாரடா என் சமர்த்து
ஒன்னுக்கு ஒன்னு ஒரசுவந்து நேந்துதிப்போ
வெள்ளிக்கோல் தடியாலே வீசினான் தொந்திசெட்டி
மூன்றுபே ருங்காத்தில் முக்காதம் போனதுவே

திரும்பியே ஓடிவந்து தீயாய் எரித்தார்கள்
அப்போது தொந்திசெட்டி அடவாக ஏதுசொல்வான்
திரியோ தனன்சேனை சேந்தபரி வாரமெல்லாம்
நிறுத்து விடுகுறவன் நில்லடா மூவருந்தான்
அப்போ கடோற்கயனும் அமட்டியே ஏதுசொல்வான்

எடங்கேடு பேசாதே எனக்கறியச் சொல்லுமடா
ஆரடா கேக்கிறவனை அஞ்சாமல் நீயுமிப்போ
ஆரடா தம்பியுங்க வங்கிஷத்தைச் சொல்லுமடா
எங்களுட வங்கிஷத்தை இப்போது சொல்லுகிறேன்
பரிவான சந்திரகுலம் பாண்டுபுத்திரன் கூட்டமடா

தாரார் புகழுடைய தருமருக்கு நேரிளையான்
சாத்திரக்கொடி வேந்தன் சகாதேவன் புத்திரன்டா
அப்போது ராவணனும் அடவாகக் கிட்டவந்து
கட்டி அழுதார்கள் கண்கள் சிலையோட
நாலுபேருங் கூடி நடந்தார்கள் அப்போது

தில்லை வனங்கடந்து திருவேலாங் காடுவிட்டுச்
சின்னொன்ன காடுஞ் செடியும் புனாந்திரமும்
காடு கடந்து கானகங்கள் தான்கடந்து
வீரதங்காள் அரமனைக்கு விடுதிக்கி வந்தார்கள்
நாலுபேரும் வந்து நலமாகத் தெண்டனிட்டுத்

தெண்டனிட்ட புத்திரரைத் திக்கென்று தானெடுத்து
ஆரடா தம்பி அறிய உரையுமடா
என் தாயே மாதாவே இனிக்கேளும் என்வார்த்தை
அர்ச்சுனன் புத்திரன் ஆனதொரு வாண்வீமன்
அப்போது வீரதங்காள் அலறி எழுந்திருந்து

வாரி யெடுத்து வர்ணமுக முத்தமிட்டுத்
தேடும் திரவியமே பசுமணியே எங்கைவந்தாய்
வந்ததொரு காரியத்தை வகையாகச் சொல்லுமையா
நல்லமுடி ராவணனும் நலமாகச் சொல்லலுற்றான்
ஆத்தாளே வீரதங்காள் அபிசேகப் பத்தனியே

மாயன்மகள் சுந்தரியை மாலையிடப் போறமம்மா
அந்தமொழி கேட்டு ஆனதொரு வீரதங்காள்
போங்களென்று சொல்லிப் போற்றி விடைகொடுத்தாள்
தன்னுட மகனைத் தனியாய்ப் பயணம்பண்ணிப்
போடா மகனேயென்று பிரியமுடன்
சொன்னதுவே

சொல்லி யனுப்பிக்கொண்டு துரிசாகப் போறார்கள்
ஊரு கடந்து உத்திராட்சப் பூமிவிட்டுக்
காடு கடந்து சரடிமலை தான்கடந்து
நாடு கடந்து நல்லபுனந் தான்கடந்து
சங்குதுவ ரகாபுரிக்கித் தானாக வந்ததுவே

பூந்தோட்டந் தன்னில் போட்டார்கள் கூடாரம்
மாயனது கண்டு வகையாகத் தான்பார்த்து
மருமகன் வந்த வகையறிந்து அப்போது
தன்னுட மனது தானேதான் பூரித்து
இப்படித் தானும் இருக்குமந்த வேளையிலே

திரியோ தனன் கூட்டம் தென்னவர்கள் கண்டார்கள்
ஏதடா கூடாரம் எதிராளி வந்தானோ
என்று பயந்து இருக்குமந்த வேளையிலே
மாயன் பெருமாளும் வகையாகக் கிட்டவந்து
திரியோ தனன்படையைத் தாக்கென்று
நான்பார்த்து

ஏதுக்கும் அஞ்சாதே இனிக்கேளும் என்வார்த்தை
நாகராசாக் கூடாரம் நமக்கென்ன வந்தாக்கால்
என், கலியாண வாசலுக்குக் காரியமாய் வந்தார்கள்
அதுகொண்டு* எங்களுக்கு அலுவலில்லை விட்டுவிடு**
கலியாண காரியத்தைச் சடுகவே நேமியுங்கள்

காவல்மிகப் பத்திரமாய்க் கட்டாக நீயிருங்கள்
என்றுசொல்லிப் போட்டு ஏற்றமுள்ள மாயவனும்
மருமக்கள் தனக்கு வகையாக அப்போது
போசனமும் பொரிகறியும் போகவே தானெடுத்து
ஆயிரம் போளையிலே அடவாக வேயனுப்பி

வரிசைகொண்டு போறமென்று வந்தார்கள் அப்போது
போளைவந்த போதே பெண்ணுமிக வந்ததடா
என்றுசொல்லித் தானும் இருக்குமந்த வேளையிலே
வாளாசன் அரிமன் வகையாக ஓடிவந்து
ஆண்டிச்சி வீட்டில் அடவாக வந்தானாம்

மாயன்மகள் சுந்தரிகி மாலைமிகக் கட்டயிலே
அந்தநல்ல மாலையை அடவாகத் தான்வாங்கித்
தன், கணையாழி மோதிரத்தை வைத்துக்கட்டினான்
அப்போது
பூவிலே மோதிரத்தை வைத்துக்கட்டினான் அப்போது
மாயன் பெருமாள் வகையாய் எழுந்திரிந்து

* அதுகண்டு (1826)
** விட்டுவிடும் (1826)

சுந்தரியாள் அரமனைக்கித் துருசாக ஓடிவந்து
என்தாயே சுந்தரியே என்வார்த்தை நீகேளும்
கலியாணம் என்று கடுகவே ஓடிவந்தேன்
செல்லக் கலியாணம் சிறப்புடனே பண்ணுகுறேன்
அருமைக் கலியாணம் அருசாகப் பண்ணுகிறேன்

சாத்தினாள் பொற்கதவைத் தாள்பூட்டி
மண்ணறைந்தாள்
முத்தான கண்ணீரை முதுமார்பில் சோரவிட்டாள்
பவளம்போல் கண்ணீரைப் பக்கமே சோரவிட்டாள்
அத்தை மகனிருக்க அவளிலந்து நேந்துதென்று
மாமன் மகனிருக்க வந்துதே அவகேடு

நாயனு மடிமேலே நாயகமோ யேறுறவள்
பேயனின் மடிமேலே பெண்கொடியோ யேறுறவள்
தன்னுட அரமனையில் அக்கினியைத் தான்கொளுத்தி
அக்கினியில் விழுவமென்று ஆர்க்கரித்துக் கொக்கரித்து
வீரசடை போட்டு வெளிப்பட்டு நிற்கையிலே

ஆண்டியுட மாலை அடவாகக் கொண்டுவந்து
சுந்தரியாள் அரமனைக்கித் துருசாகக் கொண்டுவந்தார்
ஆத்தாளே சுந்தரியே அபிசேகப் பத்தினியே
பூமாலை வந்துதம்மா பொற்கொடியே மாதாவே
அப்போது சுந்தரியாள் அடவாகத் தான்பார்த்துப்

பூவை முடிக்கப் புண்ணியமும் பெற்றேனோ
அக்கினியில் விழுந்து அனலாகப் போறேன் நான்
ஆத்தாளே சுந்தரியே அடவாகச் சொல்லுகிறேன்
பூமாலை வந்தால் புருசன்வந்தான் என்பார்கள்
புருசனோடொக்கும் பூமாலை வாங்குமம்மா

அப்போது சுந்தரியாள் அடவாகச் சொன்னாளாம்
தாதியரைத் தானழைத்துத் தானாகச் சொன்னதுவே
பூவைமிக வாங்குமடி பேரான பாங்கியரே
வாங்கிவந்து பூவை வகையாகக் கைக்கொடுத்தாள்
பூவையும் வாங்கிப் பொற்கொடியாள்
கண்ணிலொற்றியே பாத்தாள்

அப்போ கணையாழி மோதிரமும் அழுந்திச்சே
சுந்தரிக்கும்
கணையாழி கண்டவுடன் கார்குழலாள் சுந்தரியும்
தலைவாசல் திறந்து தகப்பனுக்கு ஆளுவிட்டாள்
மாயன் எழுந்திருந்து வகையாக ஓடிவந்து
அய்யரைக் கண்டு அடிவணங்கித் தெண்டனிட்டு

மாயன் பெருமாளே மனதின்படி யாச்சுதய்யா
மணவறையுஞ் சோடித்து மாப்பிளையும் வையுமிப்போ
அந்தமொழி கேட்டு அடவாக ஓடிவந்து
சுந்தரியும் அப்போது துருசாக வந்தாளே
திரியோ தனம்பெருமாள் தென்னவர்கள்
உள்ளதெல்லாம்

கலியாண வாசலிலே கடுகவே வந்தார்கள்
பவளக்கால் தூணில் பக்கவளை தான்போட்டுத்
தென்ன மரம்பிளந்து சிங்காரந் தானெழுதி
வன்னி மரம்பிளந்து வகையாய்ப் பந்தலிட்டுச்
சித்திர மெழுதிச் சிறப்பாய் அலங்கரித்து

அன்ன மெழுதி அதின்மேல் கிளியெழுதி
வர்ணமுடன் குயிலு மகிழ்ந்துவிளையாடல்செய்து
அம்மி வலமாக அரசாணி முன்னாகப்
பிரம்பு வலமாகப் பேய்க்கரும்பு முன்னாகச்
சாலுங் கரகமுந் தண்ணீரும் முன்னாகப்

பட்டாலே மேல்கட்டுப் பாங்காய் அலங்கரித்து
முத்துச் சரங்கள் முன்னாகத் தொங்கவிட்டுப்
பவளச் சரங்கள் பத்துலட்சந் தொங்கவிட்டு
மணவறைப் பந்தலிலே மாணிக்கந் தான்பரப்பிக்
காலுகளுக் காலு கண்ணாடி கட்டிவைத்து

லக்கண குமாரனுக்கும் நல்லதொரு சுந்தரிக்கும்
பங்குனி மாசம் பதினஞ்சாந் தேதியிலே
வெள்ளிக் கிழமை விசைய திசமியிலே
கலியாண மென்று கனகமுர சறையுமென்றார்
கலியாணங் கலியாணங் காரிழையாள்
கலியாணம்

கோத்தமுத்தைச் சரந்தூக்கிக் கோரதபத்தாத
மணல்பரப்பிப்
பூமாலை பொன்மாலை போத அலங்கரித்துத்
தங்கத் தகட்டாலே லக்கணர்க்குச் சரீரம் தெரியாமல்
மணவறை சோடிச்சார் மண்டலங்கள் மெச்சிடவே
இந்தபடி பண்ணி இருக்கின்ற வேளையிலே

முரசோசை கேட்டு மோசமாய்க் காணுதிப்போ
என்றுசொல்லி ராவணன் எழுந்திருந்தான் அப்போது
தம்பி யரையழைத்துத் தலைவாசல் பாத்திரென்று
இடையனென்று வேசம் இதமாகத் தானெடுத்து
நாமத்தைக் குழைத்து நன்றாக அப்போது

மாயன் துணையெனவே மனதில் மிகநினைந்து
நெத்திக்கு மூணுபட்டை நெடுகவே தான்போட்டுத்
தோளுக்கு மூணுபட்டை துருசாகப் போட்டானாம்
முழங்காலுக்கு நாலுபட்டை நாமமும் போட்டானாம்
கண்ணுகள் ரெண்டுங் கறுங்காடு போலேயப்போ

உதடுகள் ரெண்டும் குளக்கரையில் ஏரியைப்போல்
பாச்சனப்பால் எருக்கிலப்பால் பத்துமிடா தான்பிடித்துக்
கள்ளிப்பால் கூடக் காவடியில் கட்டிக்கொண்டு
அம்பது கலப்பால்ஒரு காவடியில் கட்டிக்கொண்டு
கிழக்குத் தலைவாசலிலே கடோற்கயனைக் காவல்வைத்துக்

தெற்குத்தலை வாசலிலே வாளபிமனைக் காவல்வைத்து
மேற்குத்தலை வாசலிலே தொந்திசெட்டியைக் காவல்வைத்து
வடக்குத்தலை வாசலிலே வந்தானாம் ராவாணும்
தலைவாசல் காரர்கண்டு தடுத்தார்கள் அப்போது
மாயன் பெருமாள் மனைப்பொங்கலுக்குப் பாலுமே போகுதடா

அப்பணையில் லாமல் அரமனைக்கு விடுவதில்லை
திரியோதனனைத் தெண்டனிட்டுச் சொன்னானாம்
இடையனைப்போல் தலைவாசலில் ஏகமாய் நின்றுகொண்டு
மனைப்பொங்கலுக்குப் பாலு வரிசைகொண்டு போறானாம்
அதுகண்டு ஓடிவந்தேன் அப்பணையோ ஆண்டவனே

தலைவாசலுக்கு அப்புறத்தே தள்ளிவிடச் சொன்னானாம்
அப்போது துரோணாசாரி அடவாக யேதுசொல்வான்
ஒருத்தன்வந்து பூந்தாலே உலகம் அழியுமோதான்
விட்டுவிடும் என்று விடைகொடுத்தார் அம்மானை
விடைவாங்கிக் கொண்டு வீதி வருகையிலே

இருப்புத்தலை வாசலிலே இடித்து விழுக்காட்டிக்
கொண்டுவந்த பாலைக் கோபமாய் இறைத்துவிட்டான்
காவடியைத் தானுடைத்துக் கடுகவே வாறானாம்
கண்டாளே சுந்தரியாள் கண்ணார ராவணனை
மச்சாண்டார் வாறாரென்று மறபில்
ஒதுங்கிநின்றாள்

அப்போது ராவாணும் ஆனதொரு சுந்தரியை
இனிமேலும் சிந்தனையை எண்ணாமல் விட்டுவிடு
என்றுசொல்லிச் சுண்ணாம்பை எடுத்தான்
மலைபோலே
மலைபோலே தானெடுத்து வாயிலே போட்டானாம்
வாயிலே போட்டு வகையாகத் துப்பிவிட்டான்

பதினாயிரம் பேர்கண்ணில் பாக்காய் விழுந்ததுவே
அய்யோவென்ற சத்தம் அரவங்கள் ஆனதுவே
கோவென்ற சத்தம் கோட்டையெல்லாம் ஆனதுவே
அப்போது ராவாணும் அடித்தானாங் கோபங்கொண்டு
கண்டு மிரண்டார்கள் கனத்தபடை
மன்னரெல்லாம்

கிழக்குத் தலைவாசலுக்கு ஓடியே வந்தார்கள்
கடோற்கயன் அடிக்கிறது கண்ணுவிண்ணுந் தெரியாது
வடக்குத்தலை வாசலிலே வாளபிமன் கொல்லுகிறான்
தெற்குக்தலை வாசலிலே தொந்திசெட்டி அடிக்குறான்
வாளெடுத்துக் கச்சை கட்டி வாளபிமன்
வெட்டுகுறான்

ஆனைத் தோலாலே அடித்தான் கடோற்கயனும்
வெள்ளிக்கோல் தடியாலே வீசினான் தொந்திசெட்டி
நல்லமுடி ராவாணும் நாலுதிக்கும் வீசுகுறான்
கலியாணம் என்றுவந்தோம் கல்லெடுப்பு ஆனதுவே
திக்கென்று ஓடித் திசைமாறிப் போனார்கள்

காயம்பட்டுப் போனார்கள் கணக்கு வழக்குமில்லை
கொள்ளை குடுத்தவர்கள் கோடிமன்னர் தானாக
இப்படி யாக இரணகலம் ஆச்சுதங்கே
கடோற்கையன் தானும் கடுகவே ஓடிவந்து
கண்டு வழியிலே காங்கையனைக் கட்டாகயத்
தான் பிடித்துப்

பின்கட்டாய்க் கட்டித் தம்பிகையில் தான்கொடுத்து
அளிஞ்சிப் புதையை அடவாகத் தான்பாத்து
ஊனாம் புதையை ஒருநெரடியில் போய்வளைந்து
நொச்சிப் புதையை நொடிக்குமுன்னே போய்வளைந்து
செடிகள் மலைகளெல்லாஞ் சேரவே
தான் துரத்தி

வளைந்து பிடித்தார்கள் வந்தசொரு மன்னரெல்லாம்
திரியோதனனும் அவன் தம்பிமார் அத்தினையும்
ஊனாங் கொடிபிடுங்கி ஒன்பது தாம்புகட்டி
அரசர்மக்கள் அத்தினையும் அன்பது தாம்புகட்டிப்
படைத்தலைவர் மன்னவரைப் பதினஞ்சு
தாம்புகட்டி

வீசினான் துடையோடே விருசாய் நடந்தார்கள்
சங்குதுவ ராபுரிக்குத் தள்ளியே வந்தார்கள்
மணவறைப் பந்தலுக்கு வகையாகக் கூட்டிவந்து
காலுக் கொருவனைக் கட்டினார் அப்போது
தொண்ணூற தொன்பதுபேரைத் தூணிலே
கட்டிவைத்தார்

படைத்தலைவர் மன்னவரைப் பாங்காய் வருஞ்சுகட்டி
அவன் தகப்பமார் பார்த்திருக்கத் தானாகக் கூட்டிவந்து
நல்லதம்பி நாவிதனை நலமாகக் கூட்டிவந்து
லக்கணன் தலையிலே நலமாக அப்போது
சிறுநீரை விட்டுச் சிரைத்தார்கள் அப்போது

அஞ்சு கவறாய்ச் சிரைத்தார்கள் அப்போது
வண்ணான் சிறுகுதிரை வகையாகக் கொண்டுவந்து
ஆட்டுத்தோல் கல்லணையாய் அடவாகத் தான்போட்டு
ஊனாங் கொடியை அங்கவடி தான்சேர்த்துப்
பீத்தமுறம் ஆலவட்டம் பிடிக்கவே சொன்னார்கள்

எருக்கலம்பூ மாலை எடுக்கவே சொன்னார்கள்
வெஞ்சாமரம் என்று விளக்கமார் வீசிவரப்
பட்டணமுஞ் சுத்திப் பாங்குடனே வந்தபின்பு
நாய்ப்பீயைத் தான்கரைத்து நலமாகத் தாதியர்கள் கொண்டுவந்தார்
ஆலாத்தி சுத்தி அடவாக லக்கணர்க்கு

அரசாணிக் கிட்ட அடவாகக் கொண்டுவந்தார்
அத்திமுளை கொண்டு அஞ்சுமுளை தான்பிடித்துக்
காலுக்கு ரெண்டுமுளை கைக்குரெண்டு முளையறைந்து
பின்னுமொரு முளையூணிப் பேசாமல் வரிஞ்சுகட்டி
அவன்தலையில் சாணி அடவாய் உருட்டிவைத்து

ஆயிரம் பெருந்தாளி அவன்தலையில் வைத்தார்கள்
கைக்குரெண்டு தீவட்டி கடுகக் கொடுத்தார்கள்
அப்போது தம்பியரே அருமைக் கலியாணம்
பருப்பில்லாக் கலியாணம் பாத்தவர்க்கும் ஏறாது
எண்ணெயில்லாத் தீவட்டி எரியுமோ வையகத்தில்

மாயனில்லாக் கலியாணம் மண்டலத்துக் கேறாது
மாயனைப் பாத்து வகையாகக் கொண்டுவாறேன்
தம்பி கடோற்கயனே தாட்டாளா எச்சரிக்கை
என்றுசொல்லி ராவணன் ஏதமாக வாறானாம்
மலைகள் செடிகளெல்லாம் வகையாகத் தான்பார்த்துச்

சுத்தாத ராட்சியத்தைச் சுத்தி மிகப்பார்த்து
வனங்கள் அதிர வகையாகத் தான்பாத்து
மாயனைக் காணாமல் மதிமயங்கி ராவானும்
ஏரிக்கரை மேலே எதுக்க வருகையிலே
ஏரிக்குங் கீழே இளஞ்சுள்ளி யாய்முளைத்தார்

நாராயணன் சுள்ளியென்று நலமாகத் தான்வளர்ந்தார்
கள்ளிச் செடியைச் சுத்தியே ஓடிவந்து
மாயன் பெருமாளே மண்ணில் ஒளிவதுண்டோ
சுள்ளிச் செடியைச் சுத்திவந்து தெண்டனிட்டுக்
கண்டாரே மாயவரும் கனகமுடி ராவானை

தவளையென்று வடிவெடுத்துத் தண்ணியிலே
போய்விழுந்தார்
முதலையென்று வடிவெடுத்து முக்காலும்
போய்விழுந்தார்
ஆமையென்று வடிவெடுத்து அடவாகப் போனதுவே
குரவனென்று வடிவெடுத்துக் குத்துனான் கோலாலே
அப்பவே மாயன் ஆகாச மட்டப்பறந்தார்

ராசாளி யென்று நலமாக வேதுடந்தான்
எலியென்று வேசங்கொண்டு இறங்கினார் பூமியிலே
பூனையென்று தான்போய்ப் பிடித்தான் பிடனியிலே
மெச்சினேன் மருமகனே விட்டுவிடு சொல்லுகுறேன்
உங்களுட பெண்ணை ஒருவருக்குங்
கொடுப்பேனோ

நீங்களும் வல்லையென்று வழிபாத்து நானிருந்தேன்
ராவானே நீயும் நான்சொல்லக் கேளுமினி
திரியோதனன் பாத்திருக்கத் தென்னவர்கள் முன்னாகக்
கட்டிக்கொண்டு போடாநீ கனத்ததொரு ராவானே
கம்பிளிக் கயறாலே கட்டினான் மாயவரை

ராவானும் தம்பியர்க்கு நலமாகச் சொன்னதுவே
இப்பவல்லோ பாண்டவர்கள் இந்தஅருமைதனைப்
பார்க்கவேணும்
அருமைக் கலியாணம் ஆர்பார்க்கப் போறார்கள்
அய்யமரையுந் தான்நினைந்து அடவாக நின்றார்கள்
வனம்போன பாண்டவர்கள் வைகைக்
கரையோரம்

அல்லிக் கிழங்குவெட்டி அடவாகக் கொண்டுவந்து
வேகவைத்துத் தின்று வெளிப்பட்டு நின்றார்கள்
வண்ணான் துறையும் வகையான கோம்பைக்குள்ளே
அயிலவரளிச் செடியிலே ஆய்வரும் போய்ப்படுத்தார்
வலதுதோள் துடித்திடுமாம் வகையான
பஞ்சவர்க்கு

அப்போது தர்மர் அடவாய் எழுந்திருந்து
அயிவரளிச் செடியிலே பல்லி அலைகொட்டிச்
சொன்னதுவே
சொன்ன வசனத்தைத் தோற்றமுள்ள பஞ்சவர்கள்
அந்த வசனத்தைத் தம்பி அடவாகச்சொல்லுமென்றார்
நல்லதென்று சொல்லி நலமாகச் சுத்திவந்து

அப்பனையோ சாமியென்று அடிவணங்கித்
தெண்டனிட்டு
நல்லதடா சகாதேவா நலமாகப் பாருமடா
அப்போது சகாதேவன் ஆண்டு மிகப்பாத்து
ஆண்டவனே அண்ணாவி அடியேனுஞ்
சொல்லுகிறேன்
சவனத்தைப் பாத்துத் தப்பாமல் சொல்லுகிறேன்

திரியோ தனன்பாவி தீரவியத்தைத் தான்கொடுத்து
மாயன் பணம்வாங்கி வகையாக வந்தல்லவோ
லக்கண குமாரனுக்கு நாள்குறித்து வந்தாப்போல்
அடியின் பிறகே ஆனபடை உள்ளதெல்லாம்
கன்னனும் காங்கையனும் கதித்ததொரு
சல்லியனும்

திரியோ தனப் படையும் தென்னவர்கள் தன்படையும்
சேனைபடை உள்ளதெல்லாம் சேரவே கூட்டமிட்டுத்
துவரகா புரியிலே சோபனங்கள் காறுமய்யா
அந்தநல்ல சேதி அடவாகக் கேட்டாப்போல்
தொந்திசெட்டி தானுங் கூடவே வந்தல்லவோ

நால்பேருங் கூடி நலமாய் வளைந்துகொண்டு
ஆனைபடை சேனையெல்லாம் அடவாகத் தான்துரத்திக்
குதிரைபடை சேனையெல்லாம் கொக்கரித்துத் தான்துரத்தி
வெட்டித் துரத்தி வெத்திகொண்டார் அம்மானை
கண்டு பயந்து காட்டிலே ஓடிவந்தார்

அடியின் பிறகே அடவாய்த் துடந்துவந்து
அளிஞ்சிப் புதையிலே அடவாகத் தான்பாத்து
நொச்சிப் புதையிலே நூறுபேர் தனைப்பிடித்துக்
கூடாரம் போட்டாப்போல் கோடிடால் நட்டாப்போல்
குளத்தாங் கரையோரம் கோடிடால் நட்டாப்போல்

கையொடிஞ்சு காலொடிஞ்சு சனத்த படை முறிஞ்சு
கலியாணம் என்றுவந்தோம் கல்லெடுப்பு ஆனதுவே
ஊணாம் புதையில் ஒளிஞ்சசனம் அத்தினையும்
ஒளிஞ்சசனம் அத்தினையும் ஒருநொடியில் தான்பிடித்துத்
திரியோ தனனையும் அவன்தம்பிமார் அத்தினையும்

ஊணாங் கொடிபிடிங்கி ஒன்பது தாம்புகட்டி
படைத்தலைவர் அத்தினையும் பதினஞ்சு தாம்புகட்டி
முன்னாகத் தள்ளி வீசிவிட்டான் ராவானும்
துவரகா புரிக்கித் துருசாகக் கூட்டிவந்து
கலியாணப் பந்தலிலே காலோட்டே கட்டிவைத்து

லக்கணையனைக் கூட்டிவந்து நடுச்சபையிலேநிறுத்தி
நல்லதம்பி நாவிதனை நலமாகக் கூட்டிவந்து
சிறுநீர் தலையில்விட்டுச் சிறப்பாக மோளையிட்டு
அஞ்சு குடுமைவிட்டு அடவாக மோளையிட்டு,
அத்தி மூளைகொண்டு அஞ்சு முளையறைத்து

சாணி உருட்டித் தலைமேல் விளக்குவைத்துத்
தோளுக்கு ரெண்டுவிளக்குச் சுடராக வைத்தல்லவோ
கைக்குரெண்டு தீவட்டி கடுகக் குடுத்தார்கள்
வண்ணான் சிறுகுதிரை வகையாகக் கொண்டுவந்து
ஆட்டுத்தோல் கல்லனையாய் அடவாக
மேல்போட்டு

பழமுறமும் ஆலவட்டம் பாங்காகத் தான்பிடித்து
வெஞ்சா மரமென்று விளக்குமார் வீசிவர
நாய்ப்பிய்யால் ஆலாத்தி நரைக்கிழவி சுத்திவிட்டான்
எருக்கலம் பூமாலை ஏகமாய்ப் போட்டார்கள்
மாயன் மறைந்து மாயமாய்ப் போனதுவே

மாயனைத் தேடி ராவான் மலைகள் செடிகளெல்லாம்
காணாமல் தேடிக் கரையோரம் வருகையிலே
மாயன் பெருமாள் மண்ணில் மறைந்ததுவே
நாராயணன் சுள்ளியென்று நலமாய் முளைத்தாரே
அந்தச், சுள்ளிச் செடியைச் சுத்திவந்து
தெண்டனிட்டு

மச்சனென்று வந்து வகையாகத் தன்விழுந்தார்
ராவான் முதலைபோல் நலமாகத் தான்துடந்தான்
ஆமையாய் வடிவெடுத்து ஆனதொரு மாயவரும்
குறவனென்று வடிவெடுத்துக் குத்தினான்
குத்துக்கோலாலே
நாரையென்று வடிவெடுத்து நன்றாய்ப்
பறந்துவிட்டார்

ராசாளி யாக நலமாய்த் துடந்துவிட்டான்
எலியென்ற வேசங்கொண்டு இறங்கினார் பூமியிலே
ராவான் பூனையாய் வடிவெடுத்துப் பிடித்தான் பிடனியிலே
மெச்சினேன் மருமகனே விட்டுவிடு சொல்லுகுறேன்
அப்போது ராவானும் அடிவணங்கித் தெண்டனிட்டுத்

தெண்டனிட்ட ராவானைத் திக்கென்று தானெடுத்துக்
கம்பளிக் கயறெடுத்துக் கட்டினான் ராவானும்
சங்குநுவ ரசாபுரிக்குத் தள்ளியே வந்தானாம்
கலியாண வாசலுக்குக் கநத்தாவே காணேனே
இந்தருமை பார்க்க எங்களையரேக் காணேனே

ராவான் கடோற்கயனும் நல்லதொரு வாளபிமனும்
நினைத்து புலப்பி நிசமாக நிண்ணதுண்டு
அதுகண்டு பல்லி அடவாகச் சொல்லுதையா
தமபிசொன்ன சாத்திரமும் தப்பா தொருநாளும்
அருச்சுனன் துரோபதையை அடவாய்ப் பயணம்பண்ணித்

தம்பியரைத் தானழைத்துத் தர்மரும் அங்கேகுசெல்வார்
கலியான வாசலிலே கலக்கம் வராதபடி
திரியோ தனன்படையும் தென்னவர்கள் உள்ளதெல்லாம்
ஒருதாழ்வு வராதபடி தாட்டிவிட்டு வாடாநீ
தப்பி கலியாணம் தாழ்வு வராதபடி

கலியாண வாசலுக்குக் கடுகவே போடாநீ
கலியாண வாசலிலே கலக்கம் வராதபடி
திரியோ தனன்படையும் தென்னவர்கள் உள்ளதெல்லாம்
தம்பி அருச்சுனரே தாடாளா போய்த்திரும்பு
விடைவாங்கிக் கொண்டு வெளிப்பட்டுப் போனதுவே

அந்த வனங்கடந்து அயிரா பதங்கடந்து
அருச்சுனனும் அப்போ ஆனசன்னாசி வேசங்கொண்டு
பாஞ்சாலி துரோபதையும் பக்கமே ஆண்டிச்சியாய்ப்
பொன்னாலே பாதகுறடும் பொன்பிரம்பு கைபிடித்துச்
சடையும் முடியும் தன்காதில் குண்டலமும்

பாலப்பழம் போலே பழுத்த கிழவனைப்போல்
கலியாணப் பந்தலிலே கடுகவே வந்தார்கள்
மாயனைக் கண்டு வகையாகத் தெண்டனிட்டு
நயினமுள்ள பாசையிலே நலமாகச் சொன்னதுவே
திரிபோதனன் திரவியத்தைத் திரமாகக் கொள்ளையிட்டு

ஆனபடை சேனையெல்லாம் அரவாசி சேதங்கண்டு
பெண்ணுக்கு வந்து பிரியமுடன் சிககிவிட்டார்
பதினெட்டு நாளைப் படைப்போர்க் கிரைவேனும்
எந்தவித மாகிலுஞ் சன்னாசி இதமாகத் தட்டவேனும்
கலியாண வாசலுக்கு நீர் வந்ததே போதுமிப்போ

நயினமுள்ள பாசையிலே நலமாகச் சொன்னதுவே
பொன்னாலே நாக்காலி பிரியமுடன் தான்போட்டு
ராவான் கடோற்கயனும் நல்லதொரு வான்வீமன்
மூவரும் வந்து முக்காலுந் தெண்டனிட்டுத்
தெண்டனிட்ட பாலகரைத் திக்கென்று தானெடுத்து

இன்னம் பதம்பெறுவாய் இளையபதம் உண்டாகும்
பின்னைப் பதம்பெறுவாய் பெருமாள் துணையுமுண்டு
வாழ்த்தி விடைகொடுத்தார் வாலசன்னாசியரும்
மாயன் பெருமாளும் வாலசன்னாசியரும்
சன்னாசி பேச்சைத் தட்டாமல் கேளுமிப்போ

தாரார் புகழுடைய தர்மருட ராச்சியத்தில்
உங்கள் தகப்பமார் ஐவரும் சன்னாசி பேச்சைத்தட்டார்
அப்படிப் போலே நீயும் அடவாகக் கேளுமிப்போ
நல்லதென்று சொல்லி நடந்தானாம் ராவானும்
கலியாணப் பந்தலிலே கடுகவே வந்துநின்று

மணவறைப் பந்தலிலே மாணிக்கந் தானழுத்தி
முத்துச் சரங்கள் முன்னாகத் தொங்கவிட்டுப்
பவளச் சரங்கள் பக்கமே தொங்கவிட்டுத்
தென்ன மரமெழுதிச் சிகாரந் தானெழுதி
வாழை எழுதி வானகரும்பு தானெழுதிச்

சோலை எழுதித் துய்யமணி தானெழுதி
அன்ன மெழுதி அதுமேல் கிளியெழுதி
வர்ண மெழுதி மாலைகள் தொங்கவிட்டு
வெள்ளித் தகட்டாலே வேல்கட்டுக கட்டிவைத்து
முத்துநவ ரெற்றின முழுநீலக் காலழுத்தி

மணவறைப் பந்தலிலே மணலும் பரப்பிவைத்து
அம்மி வலமாக அரசாணி முன்னாகப்
பிரம்பு வலமாகப் பேய்க்கரும்பு முன்னாகப்
பூமாலை பொன்மாலை போத அலங்கரித்து
மயன்மகள் சுந்தரியும் வான்வீமன் தானுங்கூடப்

பொன்னுரதம் வெள்ளிரதம் போத அலங்கரித்து
ஆனைமேல் பேரணி அதிர முழங்கிவரக்
குதிரைமேல் பேரணி கோடிலெட்சம் முழங்கிவரக்
ஒட்டகைமேல் பேரணி ஒக்க முழங்கிவரப்
பேரிகை மத்தளம் பின்னே முழங்கிவரத்

தப்பு முழங்கத் தவில்முரசு தான்முழங்க
நாகசரங் கொம்பு நன்றாக ஊதிவரத்
தித்திமி மத்தளம் சேரவே தான்முழங்க
வயிரவி வீணை வலம்புரிச் சங்கூத
ஆலவட்டஞ் சூழ்ந்துவர அதிவீரர் முன்னடக்கச்

சாம்பிராணி வீசச் சனமெல்லாஞ் சூழ்ந்துவர
முத்துக் குடைகள் முன்னாகச் சூழ்ந்துவரப்
பவளக் குடைகள் பக்கமே சூழ்ந்துவரச்
சந்திரகாவி டாலும் தனித்தனியே தான்பிடிக்க
அனுமந்த டாலும் ஆனதொரு கைத்தளமும்

ஆகாச பாணம் ஆனதொரு பூவாணம்
பத்துமுகத் தீவட்டி பக்கமே சூழ்ந்துவர
நிலவிருசு பாணம் நிலப்பொட்டி தான்முழங்கப்
பூவாணம் பொரிவாணம் பூமியெல்லாந் தனதிரச்
சங்கீத பாணம் சரமண் டலமுழங்கப்

பூச்சக்கிரக் குடைபிடிக்கப் பூலோகஞ் சோதிமின்ன
வாளால் அபிமனுக்கும் மாயன்மகள் சுந்தரிக்கும்
இருவரெண்டு பேரும் இணைசோடாய் வருகையிலே
முத்துனால் ஆலாத்தி முன்னாகச் சுத்திநிற்பார்
பவளத்தால் ஆலாத்தி பாங்காகச் சுத்திவரும்

ஆலாத்தி சுத்தி அலங்கரித்து நிற்பாரும்
தென்னந் தெருக்கடந்து தெருவீதி தான்கடந்து
தேரைவிட்டுத் தானிறங்கித் தேன்மொழியாள் சுந்தயும்
மாப்பிளையும் பெண்ணும் மணவறையில் தானிருந்து
பாப்பார் புரோகிதரும் பக்கமே சூழ்ந்துநிற்க

மாயன் பெருமாள் வகையாகக் கிட்டவந்து
ஆண்டிச்சி சன்னாசி அடவாகப் பாத்திருக்கக்
கலியாணப் பந்தலிலே கடோற்கயனும் ஓடிவந்து
திரியோதனனையும் அவன்தம்பிமாரத்தினையும்
கலியாணப் பந்தலிலே களப்பெலி குடுக்குறண்டா

அப்போது சன்னாசி அடவாக ஓடிவந்து
கடோற்கயனைக் கைப்பிடித்துக் கண்ணாளா தம்பியரே
கலியாண வாசலிலே கலக்கம்வரலாகாது
கலியாண வாசலிலே கட்டவும் ஆகாது
கட்டை யவிழ்த்துவிடு கண்ணான தம்பியரே

அப்போ கடோற்கயனும் அடவாகச் சொன்னதுவே
எங்கள் தாயார் துரோபதையைத் தள்ளித்
துயலுரிந்தான்
ஒருவர் மயிர்பிடிக்க ஒன்பதுபேர் துயிலுரிய
இவனைக், கலியாண வாசலிலே கடுகவே
வெட்ட வேணும்
வேண்டாமடா தம்பி! இது வேளையல்ல
சொல்லுகுறேன்

ராவான் எழுந்திருந்து நலமாக ஓடிவந்து
அப்பவே சன்னாசி அடவாகத் தான்பிடித்து
வேண்டா மடாதம்பி ! வெட்டுறதும் ஆகாது
ஆருதப்பிப் போறார்கள் ஆனதொரு தம்பியரே
சொன்னபடி கேளாய் துரைமகனே ராசாவே

கோபத்தை நீயடக்கிக் குளுமையாய்ப் பாருமய்யா
அப்போது ராவான் அடவாகக் கிட்டவந்து
சன்னாசி அய்யன் தகப்பன்போல் சொன்னீரே
கலியாணப் பந்தலிலே கட்டை அவிழ்த்துவிட்டார்
கட்டவிழ்த்து விட்டாப்போல் சன்னாசி
காலில் விழுந்தார்கள்

ஆணடுமை பெண்ணடுமை அத்தனையுந் தானடுமை
பெத்தபிள்ளை யெல்லாம் பேரிட்டுத் தாறமய்யா
உள்ளநாள் உள்ளமட்டும் உம்மை மறப்பதில்லை
என்றுசொல்லித் தானும் எல்லோரும் போனார்கள்
திரியோ தனனும் திருப்பியே ஓடிவந்து

லக்கணனை விடச்சொல்லி நலமாகக் கேட்டானாம்
நாகவல்லி முடியமட்டும் நானும் விடுவதில்லை
கலியாணங் கலியாணங் காரிழைக்கிக் கலியாணம்
அரசாணிப் பந்தலிலே எல்லோருஞ் சூழ்ந்துநிற்க
வாளால் அபிமனுக்கும் மாயன்மகள் சுந்தரிக்கும்

கலியாண முகிர்த்தம் கடுகவே முடியுதிப்போ
சோபன கலியாணஞ் சுந்தரிக்கி முடியுதிப்போ
அம்மி வலமாக அரசாணி முன்னாக
அரசாணிக் காலிலே லக்கணனைக் கட்டிவைத்து
எடதுகால் சுந்தரியாள் எடுத்து மிகஉதைத்தாள்

வலதுகால் தன்னால் வாளபிமன் தானுதைத்தான்
மங்கிலியந் தான்தரித்தான் வாளபிமன் அப்போது
அரிசி பருப்பு அடவாகத் தானெடுத்துப்
புரோகிதர்க்கும் பணங்காசு போதவே தான்கொடுத்து
கலியாணம் தம்பிக்கிக் கடுக முடிந்துதுகாண்

ஆகாசம் பூமி அறிய முடிந்துதுகாண்
பள்ளியறை மாளிகையில் பாங்காகப் போயிருந்து
பூமாலை பொன்மாலை பேதவே வாங்கிவைத்து
மாயன் பெருமாள்காலில் வகையாகத் தெண்டனிட்டுச்
சன்னாசி காலில் தயவாகத் தெண்டனிட்டு

எல்லாருட காலில் இயல்பாகத் தெண்டனிட்டு
இன்னம் பதம்பெறுவீர் இளையபதம் உண்டாகும்
பின்னைப் பதம்பெறுவீர் பெருமாள் துணையுமுண்டு
மாப்பிளையும் பெண்ணும் வகையாகக் கூட்டிவந்து
சாலுங் கரகமும் தப்பாமல் சுத்திவந்து

முத்தும் பவளமும் மூன்றுதிரந் தானெடுத்தார்
வெள்ளியும் பொன்னும் வேந்தர்முன்னே தானெடுத்தார்
இருவரும் தண்ணீர் இதமாகக் கொண்டுவந்து
மஞ்சன் நீராடி வரிசையெல்லாந் தான்கொடுத்து
வரிசைகள் எல்லாம் மாயவரும் தான்கொடுத்து

நாகவல்லி சாத்திரங்கள் நலமாய் முகிந்தபின்பு
போசனமும் பொரிகறியும் பிரியமுடன் சாப்பிட்டு
வெள்ளிக் கிழமை விசைய தசமியிலே
பங்குனி மாசம் பதினஞ்சாந் தேதியிலே
தேவர்கள் தானறியத் திரமாய் முகிந்ததுவே

சந்திரரும் சூரியரும் தானவரும் தானறிய
மாயன்மகள் சுந்தரிக்கும் வாளால் அபிமனுக்கும்
கலியாண சோபனங்கள் கடுசாய் முடிந்ததுவே
லக்கணனைக் கட்டவிழ்த்து நலமாக விட்டார்கள்
ராவான் கடோற்கயனும் நல்லதொரு தம்பியரும்

சன்னாசி கால்வில்வந்து தப்பாமல் தெண்டனிட்டு
போசனமும் போட்டுப் பிரியமுடன் கூட்டிவந்து
காணிக்கை தான்கொடுத்துக் கர்த்தாவெப் போகவிட்டு
மாப்பிளையைத் தானழைத்துச் சன்னாசி போகையிலே
ராவான் கடோற்கயனை நலமாகத் தானழைத்து

அண்ணனும் தம்பியும் அடவாக வாழ்ந்திருங்கள்
வடபத்திர காளியம்மன் வருவாள் துணையாக
போறண்டா மகனே புத்தியுள்ள பாலகனே
ஆண்டிச்சி சன்னாசி அடவாகப் போனதுமே
ஊரு கடந்து உசந்தவனந் தான்கடந்து

காடு கடந்து கரடிவனம் உள்புகுந்து
அயிரவளிக் கிட்டப்போய் அருச்சுனனும் ஆண்டிச்சியும்
தர்மர்கிட்ட வந்து தயவாகத் தெண்டனிட்டுப்
போய்வந்த சேதி பிரியமுடன் தானுரைத்து
கலியாண காரியம் கடுகவே முடிந்துதையா

வாளால் அபிமனுக்கும் மயன்கள் சுந்தரிக்கும்
திரியோ தனனும் தென்னவர்கள் உள்ளதெல்லாம்
கர்ணன் சகுனி காங்கையனும் உள்ளதெல்லாம்
தப்பிப் பிழைத்துத் தன்னூரே போய்ச்சேர்ந்தார்
ராவான் கடோற்கயனும் நல்லதொரு வாளபிமனும்

மாயன்மகள் சுந்தரியை வரிசையாய்க் கூட்டிவந்து
சுபத்திரியாள் அரமனைக்குச் சுகமுடனே போனார்கள்
முத்தாலே ஆலாத்தி முந்நூறு சுத்திவந்தார்
பவளத்தால் ஆலாத்தி பதினாயிரஞ் சுத்திவந்தார்
அரமனையில் கூட்டிப்போய் அடவாக
வைத்தார்கள்

கடோற்கயனும் ராவானும் கடுகவே அனுப்பிக்கொண்டு
தொந்திசெட்டி தானும் துருசாய் அனுப்பிக்கொண்டு
அவரவர் ஊருக்கு அவரவர்போய்ச் சேர்ந்தார்கள்
சுந்தரி மாலை சுகமாய்ப் படித்தோர்கள்
இன்னஞ் சொல்லுமென்று இன்பமுடன்
கேட்டோரும்

காசு குடுத்துக் காதாரக் கேட்டோரும்
படியும் படியுமென்று பாக்கிலைகள் தந்தோரும்
எண்ணும் பதினாறாய் இளையபதம் உண்டாவார்
ஆல்போல் தழைத்து அறுகதுபோல் வேரூணி
மூங்கில்போல் சுத்தம் முசியாமல் வாழ்ந்திருப்பார்
முப்பத்தி முக்கோடி தேவர்களு மேவாழி
சந்திரரும் சூரியரும் தானவரு மேவாழி
ஆகாச வாணி பூமாதேவி தான்வாழி

*

குத்துரோகாரி வருடம் மார்கழி மாதம் 3-ஆம் தேதி மாபாளையத்திலே ........ க்கன் மகன் ரங்கம நாயக்கனுட ஸ்ரீ புண்ணியகுமாரன் சுந்தரி அம்மானை எழுதி முகிந்தது. சம்பூர்ணம். வெங்கிட்ட ரமண சுவாமி துணை உண்டாகவும். பெருமாள் துணை உண்டாகவும் தேவர் துணை. கன்னிமார் துணை உண்டாகவும். வயிரப் பெருமாள் துணை ஸ்ரீ ரெங்க நாயகர் துணை உண்டாகவும். சுப்பிரமணியர் துணை உண்டாகவும். பசுபதி ஈஷ்பரர் துணை உண்டாகவும். மாதா பிதா குரு தெய்வம்.

1826-ஆம் எண்ணுள்ள சுவடியின் இறுதிக் குறிப்பு :

விளம்பி ஆண்டு ஆவணி மாதம் 15-ஆம் தேதி திங்கட்கிழமையும் திதி திரயோதசியும் உத்திராட நக்ஷேத்திரமும் விருச்சிக லக்கணமும் கூடிய சுபயோக சுபதினத்தில் தாளியாபட்டியிலே இருக்கும் கோ. முத்துக் கருப்பக் கோனானுக்கு ஸ்ரீ புண்ணிய குமாரனாகிய கோவிந்தன் சுந்தரி மாலை எழுதி முடிந்தது. சம்பூர்ணம் குரு பாதமே துணை உண்டாகவும்.

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, ''நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்'' என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்,

தேவ. ஜோதி ஜெகராசன், இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.